மாத இதழ் ரூ.10/-
Monthly Issue Rs.10/-

வருட சந்தா ரூ.100/-
Yearly Subscription Rs.100/-

# தேவனுடைய வார்த்தை
# DHEVANUDAIYA VAARTHAI

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக (கொலோ 3:16)

மலர் / Volume 19 இதழ் / Issue 5 மே / May 2021

உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும் பக்கம்-23



"ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியேபுறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்." - [மல்கியா 4:2]



# மக்களாட்சியை இழந்துவிடாதிருப்போம்

ஆபிரகாம் லிங்கன் 1893 நவம்பர் 19ல் அளித்த கெட்டிஸ்பர்க் உரை என்ற வரலாற்றுச் சிறப்புரை:

"87 ஆண்டுகளுக்கு முன்பு **நம்முடைய பிதாக்கள் தனிமனித சுதந்திர தத்துவத்தோடும் (liberty) எல்லா மனிதர்களும் சமம் (Equality) என்ற அர்ப்பணிப்போடும் இந்தக் கண்டத்தில் புதிய தேசத்தை உருவாக்கிக் கொடுத்தார்கள்.** ஆனால் இப்போது நாம், இப்படிப்பட்டத் தத்துவத்தோடும் அர்ப்பணிப்போடும் உருவாக்கிய இந்த தேசம் காலத்தால் நிலைத்து நிற்குமா என்ற கேள்விக்குறியோடும் பெரும் ஒரு சோதனையோடும் **உள்நாட்டுப் போரில் (Civil War) இறங்கியுள்ளது**. நாம் ஒரு யுத்தக் களத்திலே நிற்கிறோம். இந்த களத்தின் ஒரு பகுதியில் இந்த தேசம் வாழுவதற்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்த போராளிகளுக்கான இறுதி இளைப்பாறுமிடத்தை அர்ப்பணிக்க வந்திருக்கிறோம். (பென்சிலுவேனியாவிலுள்ள கெட்டிஸ்பர்க் தேசிய கல்லறைத்தோட்டம் (Gettysburg National Cemetery). இப்படியொரு இளைப்பாறுமிடத்தை அமைப்பது அவர்களை நினைவுகூறும் வகையில் தேவைதான். ஒரு விசால சிந்தையோடு இதை நோக்கினால் இதை ஒரு பரிசுத்த ஸ்தலமாக அர்ப்பணித்து பிரதிஷ்டை செய்ய முடியாது. எனினும் நெஞ்சுரம் கொண்டு மரித்தவர்கள், வாழுகிறவர்கள், போராடியவர்கள் இவர்களுடைய அர்ப்பணிப்பின் ஆற்றலை நாம் எள்ளளவேனும் குறைத்து மதிப்பிட முடியாது. அவர்கள் கனம்பண்ணப்பட வேண்டியவர்கள். இப்போது நாம் பேசுவதை உலகம் ஒருவேளை அறியாமற் போகலாம். நீண்ட காலம் நினைவில் வைக்காமல் போகலாம். **ஆனால் அவர்கள் உயிர்த்தியாகத்தை நாம் மறக்க முடியாது**. அவர்கள் செய்தவற்றில் முற்றுப்பெறாமல் விட்டுச் சென்றதை நாம் செய்து முடிக்க நம்மை நாமே அர்ப்பணிக்க வேண்டும். அவர்களுடைய உயிர்த்தியாகம் வீணாய்ப் போய்விடக்கூடாது. இந்த தேசம் சுதந்திரமாகிய ஒரு புதிய பிறப்பை (A new birth of freedom) தேவ செயலால் பெற்றிருக்கிறது. இது எப்படியேனும் காக்கப்படவேண்டும். **"மக்களின் அரசு, மக்களாலான அரசு, மக்களுக்கான அரசு** (Government of the people, by the people, for the people) **என்ற மக்களாட்சிக் கோட்பாட்டை அடித்தளமாகக் கொண்ட அரசு இந்த பூவுலகத்தைவிட்டு அழிந்து போய்விடக்கூடாது".**

- நன்றி: இணையத்தளத் தகவல்

**"உன்னுடைய தேசத்திற்கு நீ என்ன செய்ய முடியும் என்பது காரியமல்ல, அனைத்து மனுக்குலத்திற்கும் நீ என்ன செய்ய முடியும் என்பதே காரியம்"** ("It is not what you can do for your country but what you can do for all of mankind") - Mike Norton.



மலர் - 19 மே - 2021 இதழ் - 5

பொருளடக்கம்


| | |
|---|---|
| 1. தலையங்கம் | 3 |
| 2. இரண்டாம் மரணத்திற்குத் தப்பும்.. | 6 |
| 3. டேவிட் பிரெய்னார்ட் | 10 |
| 4. இனிவருங் காலம் வசந்த காலமாகட்டும் | 13 |
| 5. நம்மை நிதானித்தறிவோம் | 18 |
| 6. நம் கிறிஸ்தவ வாழ்க்கை... | 19 |
| 7. உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும் | 23 |
| 8. இரஷ்ய எழுத்தாளர் டாஸ்டோவ்ஸ்கி | 27 |
| 9. நீங்கள் என்னை யார் என்று.... | 29 |
| 10. செய்திகள் .... | 2 |



**K. செல்வின் தங்கதுரை**
தொகுப்பாசிரியர்
செல்: 98421 43523 / 90873 06940
Website : www.wordofchrist.org

**வேர்ட் ஆஃப் கிரைஸ்ட் அலுவலகம்**
D.No.23-B, **"தை கிரேஸ்"**
செபஸ்டியார் கோவில் தெரு, நியூ எல்லீஸ் நகர் விரிவாக்கம், மதுரை - 16.
**போன்:** (0452) 4345580.
E-mail : wocmdu@gmail.com


# "...உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"

**(ஆமோஸ் 4:12)**

**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை நிறைந்த வசனத்துக்கு உங்களை ஒப்புவித்து வாழ்த்துகிறேன்.

உலகத்தின் மக்கட்தொகை 710கோடிக்கும் சற்று அதிகமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தியாவின் மக்கட்தொகை 138 கோடி, பெரும்பான்மை யான மக்களுக்கு பாவத்தைக் குறித்த அறிவோ, புரிந்துகொள்ளுதலோ இல்லை. **"பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே"** என்ற உணர்வோ அற்றவர்களாகவே வாழுகின்றனர். எத்தனையோ மதங் கள் இருந்தாலும், அவைகள் இவ்வுலகில் வாழும் காலத்தில் சன்மார்க்கமான வாழ்வு வாழ்ந்தால் போதும் என்ற போதனையோடு நிறுத்திக் கொள்கின்றன. அது கேட்பவர் மனதில் மெத்தனப் போக்கையே உருவாக்குகிறது. மரணத் திற்குப் பின்வரும் மறுமை வாழ்வைப்பற்றிய போதனைகள் கொடுக்கப் பட்டாலும் அதை இலக்காக வைத்து வாழ்வது மிகச் சிறிய கூட்டம்தான். மாறாக மதத்தின் பெயரால் ஒருவருக்கொருவர் அன்பை வளர்ப்பதற்குப் பதிலாக பகை மையே வளர்கிறது. அதைக் காண்பது மிகவும் துக்கமான காரியம். மதங்களின் நோக்கம் தோல்வியடைந்து எங்கோ திசைமாறிச் சென்று கொண்டு இருக்கிறது.

இந்த காலகட்டத்தில் பாவத்தைக் குறித்த சரியான புரிந்துகொள்ளுதல் மிக அவசியம். ‘‘பாவம்’’ என்ற கிரேக்க மூலமொழிச் சொல்லுக்கு ‘‘ஹமர்ஷியா’’ (Hamartia) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ‘‘குறியைத் தவறவிடுவது’’ அல்லது ‘‘இலக்கைத் தவற விடுவது’’ (Missing the mark or Missing the goal) என்று அர்த்தம். வில்வித்தைப் பயிற்சியில் (Archery) அல்லது துப்பாக்கிச் சுடும் பயிற்சியில் (Shooting practice) எதிரில் ஒரு குறிக்கப்பட்ட தூரத்தில் வட்டமான பலகையில் அல்லது கடினமான அட்டையின் (Target) மத்தியில் ஒரு சிறிய குறுவட்டம் (Bull’s eye) குறிக்கப்பட்டிருக்கும். அம்பு எய்கிறவர்களோ, அல்லது சுடுகிறவர்களோ மத்தியகுறுவட்டத்தில் படாமல் வெளியே எய்துவிட்டால் கூடியிருக்கும் பார்வையாளர்கள் ‘‘ஹமர்ஷியா’’ என்று குரல் எழுப்புவார்கள். அதாவது ‘‘நீ உன் இலக்கைத் தவறவிட்டாய்’’ என்று சத்தமிடுவர். அவன் அந்த போட்டி ஆட்டத்தில் தகுதி இழந்தவனாக (Disqualified) வெளியேற்றப் படுவான். இலக்கைத் தவறியவன் தோல்வியைத் தழுவுவான். இந்த வார்த் தையைத்தான் பாவத்தைக் குறிக்கும் சொல்லாக வேதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

வேதத்தின் அடிப்படையில் இதை சிந்திப்போமானால் பாவத்திற்குப் பின் னால் ஒரு பிரமாணமும் (Law), பிரமாணத்தைக் கொடுத்த ஆண்டவரு மிருக்கிறார் (God, the Law giver). ஆண்டவர், தமது சித்தத்தின்படி பிரமாணங் களை வகுத்துக் கொடுத்திருக்கிறார். அந்த பிரமாணத்தை நாம் மீறும்போது அவரது சித்தத்திற்கு மாறாக செயல்படுகிறோம் என்பது மட்டுமல்ல. **‘‘நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம்’’** என்று 1 யோவா.3:4ல் வரையறுத் திருக்கிறது. மேலும் **‘‘நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது’’** (1 தெச.4:3) என்று வேதம் சொல்லு கிறது. அந்த சித்தம் செய்வதில் முரண்பாடு ஏற்பட்டாலும் அது பாவமாக மாறும். ஏனெனில் ‘‘தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக் கிறார்’’ (வ.7) அழைப்பின் நோக்கத்தில் மாறுபாடு ஏற்படும்போது நாம் தகுதி இழக்கிறோம், தோல்வியடைகிறோம். ஆகவே பிரமாணங்களையும், பிரமா ணத்தைத் தந்த ஆண்டவரையும் விளங்கி உண்மையாய் செயல்படுவோ மானால் நாம் பாவத்திற்கு விலகி வாழமுடியும். நாம் முதலில் கண்டதுபோல ‘‘பரிசுத்தமில்லாமல் ஒருவரும் கர்த்தரைத் தரிசிப்பதில்லை’’ என்ற பிரமா ணத்தின்படி பரிசுத்தத்தோடு கர்த்தரை சந்திக்க வேண்டும் என்பதே நமது இலக்கு. இலக்கைத் தவறவிடாதிருப்போம். நம்மை நோக்கி ‘‘ஹமர்ஷியா’’ என்ற குரல் வராதிருக்கட்டும்.

ஆண்டவர், நம்மை சிருஷ்டித்தவர். நாம் வழிதப்பினாலும் கூட மீண்டும் சரியானவழிக்கு நாம் வர நம்மை போதித்து, எச்சரித்து, சிட்சித்து நடத்துகிறார்.

ஏனெனில் அவர் பாவத்தை வெறுக்கிறார். பாவியை சிநேகிக்கிறார். ஆமோஸ் தீர்க்கதரிசி ஆண்டவரின் இப்பெருந்தன்மையை ஆமோஸ் 4:6-13 வசனங் களில் படம் பிடித்துக் காட்டுகிறார். உங்களைச் சீர்படுத்த உணவு பற்றாக் குறையைக் கட்டளையிட்டேன். ''ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பா மற்போனீர்கள்''. உங்கள் விவசாயத்தின் பலனை அழித்துப்போட்டேன். ''ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள்''. கொள்ளை நோயை உங்களுக்குள் அனுப்பினேன். ''ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற் போனீர்கள்''. சோதோம் கொமோராவைப் போன்ற அழிவை நியமித்தேன். நீங்கள் அக்கினியிலிருந்து பறிக்கப்பட்ட கொள்ளியைப்போல இருந்தீர்கள். ''ஆனாலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள்''. வேறுவிதமாகச் சொன்னால் மக்கள் மனந்திரும்பும்படி (Repent) தருணத்தைக் கொடுக்கிறார். ''மனந்திரும்புதல்'' என்ற சொல்லுக்கு கிரேக்க மூலமொழியில் மெட்டநோயா (Metanoia) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ''அதற்கு சிந்தையில் மாற்றம்'' (Change of mind) என்றும், ''போகும் திசையில் மாற்றம்'' (Change of direction) என்றும் அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. இராணுவம் அல்லது காவல் துறை அணிவகுப்பை நீங்கள் பார்த்திருப்பீர்கள். (About Turn) அபவுட் டர்ன் என்ற கட்டளை கிடைத்தால் எந்த திசையில் சென்று கொண்டிருந்தார்களோ அந்தத் திசையிலிருந்து முற்றிலும் மாறான திசைக்குத் திரும்ப வேண்டும். அதைத்தான் ஆண்டவர் என்னிடத்தில் திரும்புங்கள் என்று சொல்லுகிறார்.

கடைசியாக ஒரு எச்சரிக்கையைக் கொடுக்கிறார். நீங்கள் இனியும் என் னிடத்தில் திரும்பாமற்போனால் மீண்டும் உணவுப் பஞ்சத்தையும், குடி தண்ணீர் பஞ்சத்தையும், விவசாயத்தின் பலனை அழிக்கவும், சோதோம் கொமோராவுக்கு நிகழ்ந்தது போலவும், கொள்ளை நோயையும் அனுப்பு வேன். நான் இப்படி செய்யப்போகிறபடியால் **''..உன் தேவனை சந்திக்கும் படி ஆயத்தப்படு''** என்று மீண்டும் நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் இலக்கைச் சுட்டிக் காட்டுகிறார். மனந்திரும்பி, பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டு இலக்கை நோக்கித் தொடருவோம். அவருடைய இரண்டாம் வருகை மிகச் சமீபமா யிருக்கிறது. நமக்குத் தரும் தருணங்களைத் தவறவிடாதிருப்போம். பழைய ஏற்பாட்டில் ''ஆயத்தப்படு'' (Get ready) என்று சொன்னவர் புதிய ஏற்பாட்டில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ''ஆயத்தமாயிரு'' (Be ready) என்று சொல்லு கிறார். ஆயத்தமாயிருப்போம். ''சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்தும சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும் படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்'' (1 தெச.5:23,24). அவரைச் சார்ந்து கொள்ளுவோம். ஆமென்.

**இயேசுவின் பணியில், K.செல்வின் தங்கதுரை**

# இரண்டாம் மரணத்திற்குத் தப்பும் வழி என்ன?

**"நம் தலைவராகிய ஆண்டவர்தாம் (இரண்டாம்) இறப்பினின்று விடுதலைதர வல்லவர்" (பொன்மொழிகள்.சங்.68:20).**

வேத வசனத்தின் வெளிச்சத்தில் இரண்டாம் மரணத்திற்குத் தப்பும் வழியை அறிந்து அதை நடைமுறைப்படுத்தி நம்மை சீர்படுத்திக் கொள்வது கிறிஸ்தவ வாழ்வுக்கு இன்றியமையாதது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மரணத்தை சந்திக்காமலேயே எடுத்துக் கொள்ளப்பட்ட ஏனோக்கையும் எலியாவையும் அறிவோம். கோடான கோடி மக்கள் வாழும் இவ்வுலகில் ஆச்சரியமாக அவ்விருவர் மட்டுமே மரணத்தைக் காணாமலேயே நித்தியத்திற்குள் பிரவேசித்தவர்கள். நம்முடைய வாழ்வில் ஆண்டவர் நம்மை இரண்டாம் மரணத்திற்கு தப்புவிக்க வல்லவராயிருக்கிறார் என்பதை விளங்கிக் கொள்ளுகிறோம் (சங்.68:20). நாம் விசுவாசியாக இருந்தாலும் அவிசுவாசியாக இருந்தாலும் அனைவருக்கும் பொதுவாக இயற்கை மரணம் ஒன்றிருக்கிறது (Natural death). நாம் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டோம், மண்ணிற்கு திரும்புவோம் (ஆதி.3:19). இந்த மரணத்திற்கு யாரும் தப்பமுடியாது. இது சரீரப்பிரகாரமான மரணம் (Physical death). இரண்டாம் மரணம் என்பது ஆவிக்குரிய மரணம் (Spiritual death). இயேசு கிறிஸ்துவுக்கு தங்கள் வாழ்வை முற்றுமாக ஒப்புக் கொடுக்காத பாவிகளும் அஞ்ஞானிகளும் இந்த இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (வெளி.21: 8; 20:14).

மக்களுள் ஏழு அணியினர் (Seven groups) இரண்டாம் மரணத்திலிருந்து தப்புவார்கள். அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும்?

**1. தங்கள் பாவங்களினால் உணர்த்தப்பட்டு மனந்திரும்பி அவற்றை அறிக்கை செய்து தங்கள் இருதயத்தை இயேசு கிறிஸ்துவிடம் ஒப்புவித்தவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். அப்படிப்பட்டவர்கள் இரண்டாம் மரணத்திற்குத் தப்புவிக்கப்படுவார்கள்.** இரட்சிப்பை அடைய அடிப்படையான தேவை பாவமன்னிப்பும் மனந்திரும்புதலும் தான். ஆகவேதான் இயேசு தமது சீடர்களிடம் "மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிப்படவேண்டியது" என்று (லூக்.24:47) கட்டளையிட்டார். இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான் ஞானஸ்நானனின் முதல் பிரசங்கமே "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்பது தான் (மத்.3:2). தொடர்ந்து வந்த இயேசு

கிறிஸ்து ''தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்'' (மாற்.1:15) என்று பிரசங்கித்தார். இயேசுவின் சீடர்களும் ''மனந்திரும்புங்கள்'' என்று தான் பிரசங்கித்தனர் (மாற்.6:12). இயேசுகிறிஸ்துவின் பூலோகப்பணி முடிந்து அவர் பரமேறிச் சென்றபின்னும் அவரைத் தொடர்ந்து அவரது சீடர்கள் குறிப்பாக பேதுருவும் யோவானும் பாவ மன்னிப்பையும் மனந்திரும்புதலையும் வல்லமையாய் அறிவித்தனர் (அப்.2:37,38). அதைத் தொடர்ந்து அப்போஸ்தலனாகிய பவுல் மனந்திரும்புதலைக் குறித்தும் விசுவாசத்தைக் குறித்தும் அறிவித்தான் (அப்.20:21). பவுல் ஒரு எச்சரிக்கையின் செய்தியையும் கொடுத்தார். ''நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனா யிருக்கக்கடவன்'' என்று பிரகடனப்படுத்தினார் (கலா.1:8). ஆனால் இன்று வளமை வாழ்வு சுவிசேஷம் என இவ்வுலகில் வாழ்வதுதான் இயேசுவின் நோக்கமென்ற போதனை பெருகிவரும் காலத்தில் நாம் வாழுகிறோம். நாம் வஞ்சிக்கப்படாமல் ஆவியினால் போதனைகளை சோதித்தறியும் ஆற்றலைப் பெற்றுக் கொள்ளுவோம் (1யோவா.4:1). ''மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை (ஆத்துமாவை) நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன?'' என்ற எச்சரிக்கையை எப்பொழுதும் மனதில் கொள்வோம் (மத்.16:26). மனந்திரும்புதலை அடைந்து கொள்ள கரிசனையுள்ளவர்களாயிருப்போம். அதற்கு இயேசுவே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார் (யோவா.14:6).

**2. நீதியை நடைமுறைப்படுத்துவோருக்கு இரண்டாம் மரணம் இல்லை** என்று வேதம் சொல்லுகிறது. ''அநியாயத்தின் திரவியங்கள் ஒன்றுக்கும் உதவாது; நீதியோ மரணத்துக்குத் தப்புவிக்கும்'' (நீதி.10:2). ''கோபாக்கினை நாளில் ஐசுவரியம் உதவாது; நீதியோ மரணத்திற்குத் தப்புவிக்கும்'' (நீதி.11:4). நோவா தன் காலத்தில் வாழ்ந்தவர்களுக்குள்ளே நீதிமானாக இருந்தான் (ஆதி.6:9). அவன் பின்பற்றிய அதே நீதியை மற்றவர்களுக்கும் பிரசங்கித்தான் (2பேது. 2:5). முழு மனுக்குலத்திற்கும் அக்கிரமங்களின் மிகுதியில் ஆக்கினைத் தீர்வு வந்து ஜலப்பிரளயத்தால் அழிக்கப்பட்டபோது பேழையைக் கொண்டு நோவாவும் குடும்பமும் இரட்சிக்கப்பட்டது. ''விசுவாசத்தினால் உண்டாகும் நீதிக்குச் சுதந்திரவாளியானான்'' (எபி.11:7). இயேசு கிறிஸ்து நமக்கு இரட்சிப்பின் பேழையாகயிருந்து (Ark of Salva-

tion) இரண்டாம் மரணத்திற்கு தப்புவிக்கும் வழியாக இருக்கிறார்.

**3. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்கு இரண்டாம் மரணமில்லை.** "தமக்கு பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும்; பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது" (சங்.33:18, 19).

**4. தேவன் மீது விசுவாசமுள்ளோர் யாவருக்கும் இரண்டாம் மரணம் இல்லை.** "விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக் கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான்" (எபி.11:5). இயேசுகிறிஸ்து "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவா.5:24).

**5. இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக் கைக்கொண்டால் அவனுக்கு இரண்டாம் மரணம் இல்லை.** "ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (யோவா.8:51) என்று வேதம் சொல்லுகிறது.

**6. பரிசுத்தமும் சுத்தமுமான வாழ்வு வாழ்வோருக்கு இரண்டாம் மரணம் இல்லை.** "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே" (எபி.12:14).நம்முடைய ஆண்டவர் பரிசுத்தமுள்ளவர். ஆகவே தம்முடைய பிள்ளைகளாகிய நம்மிடத்திலும் அதே பரிசுத்தத்தை எதிர்பார்க்கிறார் (1 பேது.1:15,16). தேவன் நம்மை பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார் (1 தெச.4:7). நம்மை நாமே வஞ்சித்துக் கொள்ளாதபடி எச்சரிக்கையாயிருப்போம்.

**7. தேவனுடைய சித்தம் செய்வோருக்கு இரண்டாம் மரணம் இல்லை.** இயேசுகிறிஸ்து தம்முடைய மலைப்பிரசங்கத்தில் "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்று (மத்.7:21). ஒருமுறை இயேசுவின் தாயாரும், சகோதரரும் இயேசுவைக் காணவந்திருந்தனர். அப்போது அவர் தம்முடைய சீடர்களிடம் பேசிக் கொண்டிருந்தார்.

இயேசுவிடம் அவர்கள் காத்திருப்ப தாகத் தகவல் சொல்லப்பட்ட போது தம்முடைய சீடர்களுக்கு நேராக கையை நீட்டி “இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே! பரலோ கத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத் தின்படி செய்கிறவன் எவனோ, அவ னே எனக்குச் சகோதரனும் சகோதரி யும் தாயுமாய் இருக்கிறான் என்றார்” (மத்.12:49,50). தேவ சித்தம் செய் யாமல் மாம்ச சித்தத்தை கிரி யையை செய்வோர் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை என்பதை வேதம் தெளிவு படுத்து கிறது (கலா.5:19-21). நாம் தேவ சித்தம் செய்கிறோமா என்பதை ஓர் சுய ஆய்வு செய்து நம்மை சீர் படுத்திக் கொள்ளுவோம்.

நாம் இரண்டாம் மரணத்திற்குத் தப்பித்துக்கொள்ள மேலே சொன்ன ஏழு காரியங்களையும் செய்கிற கூட்டத்தாரில் இருக்கிறோமா அல்லது நம்மை நாமே வஞ்சித்துக் கொண்டிருக்கிறோமா என்பதை ஆராய்ந்து பார்த்து சரியான தெரிந் தெடுப்பைச் செய்வோம்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வின் இரண்டாம் வருகை மிகச் சமீபமாய் நெருங்கி வந்து கொண்டி ருக்கிறது. “கர்த்தர் தாமே ஆரவாரத் தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத் தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்து வுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடி ருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக, மேகங்கள்மேல் அவர்களோடு கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்” (1தெச.4:16,17). அன் பார்ந்த தேவனுடைய பிள்ளைகளே, இரண்டாம் மரணத்தை மேற் கொள்ளும் ஆற்றலைத் தகுதியைப் பெற்றிருக்கிறோமா? எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருக்கும் சிலாக்கி யத்தைப் பெற்றுக்கொள்வோம். முற்றுமாக அவரது கிருபையில் சார்ந்து கொள்ளுவோம். ●

## தேவ கிருபை ஓர் தேவ வல்லமை

தேவ கிருபை என்பது தேவன் அருளும் விசேஷமானதோர் ஆற்றல் (2 கொரி.12:9). எதிர் எதிரான சில அணுகுமுறையோடும், எதிர் எதிரான சில புரிந்து கொள்ளுதலோடும் கணவனோ மனைவியோ இருக்க நேரி டலாம். அதற்காக இணைந்து வாழவே முடியாது என்று எண்ணிவிடக்கூடாது. தேவையெல்லாம் தேவ கிருபையே. இதுபோன்ற எதிர்மறையான குணாதி சயங்களைச் சாந்தத்தோடு சந்தித்தே குடும்ப உறவுகளில் வெற்றி காண தேவ வல்லமை அருளப்படுகிறது.

**- நன்றி: சகோதரன் சாம்சன் பால் - ஜீவநீரோடை, ஏப்ரல் 2021**



## வட அமெரிக்க பழங்குடி செவ்விந்தியர்களின் அப்போஸ்தலன் - டேவிட் பிரெய்னார்ட்

**(1718-1747)**

**(டெல்லி, பாஸ்டர்.ரோமில்டன், "அடைப்பட்ட அக்கினி", என்ற தலைப்பில் எழுதுகிறார்)**

## நீதிமான் மரிப்பது போல நான் மரிப்பேனாக!

மேன்மையாய் உயர்த்தப்பட்டு, யாக்கோபின் தேவனால் அபிஷேகம் பெற்று, இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய் பாடின ஈசாயின் குமாரன் தாவீதின் கடைசி வார்த்தைகள் (2 சாமு.23:1) முதற்கொண்டு தேவ மனிதர்களின் கடைசி வார்த்தைகள் இன்றுவரை தொடர்கின்றன.

தங்கள் விசுவாசத்தைக் காத்துக் கொள்ளும் வாழ்க்கைப் பயணத்திலே, யுரோக்கிலிதோன்கள் பல கண்டு, புறம்பான மனிதன் நாளுக்கு நாள் அழிந்தாலும், உள்ளான மனிதன் நாளுக்கு நாள் பெலனடைந்து, நல்ல போராட்டம் போராடி, ஓட்டத்தை முடித்து, விசுவாசத்தைக் காத்துக்கொண்டு, ஆவிக்குரிய நித்திய உயிர்ச்சேதமின்றி, மெலித்தாவின் மெல்லிய கரை கண்டு, பத்திரமாய்ப் பரலோகம் சென்று இராயனுக்கெல்லாம் இராயனாம் இயேசு ராஜன் முன்பாகத் தாங்கள் நிற்கும் முன்னே பூலோகத்தார் யாவரும் போகிற வழியிலே போன **பரிசுத்தவான்கள் பலர் தங்கள் கடைசி நாட்களில் கடைசியாகச் சொல்லி வைத்துப் போன வார்த்தைகள் இன்றும் ஜீவனோடு பேசிக் கொண்டிருக்கின்றன.**

### டேவிட் பிரெய்னார்ட் :

அமெரிக்காவின் கடும்பனி பொழிவுக்காலம் அது. மெலிந்த தேகம், வாலிப வயது. அவர்தான் பிரெய்னார்ட். கழுத்து வரை பனி பெய்திருந்தாலும் அதின் நடுவிலும் நடந்து சென்று செவ்விந்தியர்கள் மத்தியிலே காலை முதல் மாலை வரை அவர்களுக்காக ஜெபத்தில் போராடிப் போராடி வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் இரத்தம் கொப்பளிக்கும் நிலை ஏற்பட்டாலும் சரீர பெலவீனத்தைப் பொருட்படுத்தாமல் மற்றவர்களுக்காக அயராது போராடிய ஜெப வீரன் டேவிட் பிரெய்னார்ட் . காச நோய்க்கு மருந்து இல்லாத அந்நாட்களில் டேவிட் பிரெய்னார்ட் தனது 29ம் வயதிலேயே படுத்த படுக்கையிலானார். அவரது உடல், நோயினால் அரிக்கப்பட்டு அழிந்து கொண்டிருந்த சூழ்நிலையில் மாபெரும் ஆத்தும ஆதாய வீரனான **யோனத்தான் எட்வர்ட்ஸ்** அவரைப் பார்த்தார். அவர் மீது பரிவு கொண்டு அவரைப் பராமரிக்கும் பொருட்டு தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். எட்வர்ட்ஸ் அதைப் பின்வருமாறு எழுதுகிறார்.

“தேவனுடைய சித்தப்படி, பிரெய் னார்ட் தன் வாழ்வின் கடைசி நாட்களை என்னுடைய வீட்டில் செலவிட்டு மரித்ததற்காக நான் தேவனைத் துதிக்கிறேன். நான் அவருடைய ஜெபங்களைக் கேட்டு, அவரது அர்ப்பணிப்பைக் கண்டு அவருடைய முன்மாதிரியால் தொடப் பட்டேன்..”

பிரெய்னார்டு இறந்த கால கட்டத்தில், **ஜான் வெஸ்லி** தன் ஆவிக்குரிய ஊழியத்தின் துவக்க காலத்தில் இருந்தார். “ஆண்டவரின் ஊழியம் மங்கிப்போன இடத்தில் அதை மீண்டும் உயிர்ப்பிக்க என்ன செய்ய வேண்டும்?” என்று யாரோ ஒருவர் வெஸ்லியைக் கேட்க, ஓய் வின்றி உழைத்து மூன்று நாடு களை உலுக்கிய சுவிசேஷகனாகிய வெஸ்லி **“ஒவ்வொரு பிரசங்கியும் டேவிட் பிரெய்னார்டின் வாழ்க்கை சரித்திரத்தைப் படிக்க வேண்டும்”** என்று சொன்னார்.

இவரை, ஆவிக்குரிய கிறிஸ்தவ உலகின் ஹீரோ என்று சொல்வதா? அல்லது கடந்த கால ஆவிக்குரிய இராட்சதர்களில் ஒருவர் என்று சொல்வதா?. என்ன சொன்னாலும் பொருந்தும். தன் பெயர் சொல்ல அவர் ஒரு புத்தகம் எழுதிவைத்துச் செல்லவில்லை. தலைமுறை தலை முறையாகத் தன் பெயரை நிலை நாட்ட ஒரு சபையையோ, சங்கத் தையோ ஸ்தாபனத்தையோ ஸ்தா பித்துச் செல்லவில்லை. ஆனாலும் சுமார் 275 வருடங்களுக்கு முன்பு மரித்த **இந்த ஜெபவீரன், மரித்தும் மக்கள் மனங்களில் இன்னும் வாழ்கிறார்.** அவர் விட்டுச் சென்ற தெல்லாம், அன்றாடம் தன் ஆண்டவ ரோடு சஞ்சரித்த தன் அனுபவங் களும், அங்கலாய்ப் பின் ஜெபம் நிறைந்த பக்கங்கள் பதிந்த தனது டைரி மட்டுமே!

அவர் தனது டைரியில் எழுதி வைத்துப் போன அவரது கண்ணீரின் எழுத்துக்களும் ஜெபத்தின் அக் கினியும் “ஜான் வெஸ்லி” என்ற வாலிபனைப் பற்றிப்பிடிக்க, அதைத் தொடர்ந்து எழும்பியது “மெத்தடிஸ்ட்” சபை. “ஒவ்வொரு மெத்தடிஸ்ட் ஊழியரும் டேவிட் பிரெய்னார்டின் ஒப்பற்ற அந்த டைரியை அவசியம் படிக்கும்படி செய்” என்று தன் சகோதரர் **சார்லஸ் வெஸ்லிக்கு** எழுதினார் ஜான் வெஸ்லி. “தன் வாழ்வின் சுகவீனப்பட்ட கடைசி நாட்களை தேவ மனிதர் யோனத் தான் எட்வர்ட்ஸின் வீட்டில் கழித்த பிரெய்னார்டின் பழைய டைரிகள் கவனக்குறைவினால் எரிக்கப்பட்டுப் போனாலும், எஞ்சியிருந்த டைரி களின் பக்கங்களில் இன்றும் நெருப்பு எரிந்துகொண்டு தான் இருக்கிறது. “அதுவே **பிரைட்டன் ராபர்ட் ஸனைப்** பற்றிப்பிடிக்க, வாக்குவல்ல பிரசங்கியானார் அவர்!”

“பிரெய்னார்டின் டைரியைப் படித்த போஸ்ட்டனின் **Dr. A.J. ஜோர் டன்,** பிரெய்னார்டின் கல்லறை நோக்கிக் கழுத்தளவு பனிக்குள்ளே நடந்து சென்று அந்தக் கல்லறையின்

முன் கண்ணீரோடு தலைகுனிந்து நிற்க.. அன்று முதல் அவரது ஊழியமே வேறு ஒரு பரிமாணத் தின் உயரத்துக்குச் சென்றது..'' பிரெய்னார்டின் வாழ்க்கை வரலாறை **வில்லியம் கேரி வாசித்தார்.** இது அந்த இளம் ஆத்தும ஆதாய வீரனின் உள்ளத்தில் ஒரு கிளர்ச்சியை உருவாக்க.. அது அவரை இந்தியக் கரையோரம் கொண்டு வந்து சேர்த்தது. பிரெய்னார்டின் உருகி நின்ற ஆத்துமாவிலிருந்து **எட்வர்ட் பேசனின்** வாழ்க்கை தேவனால் ஒளியேற்றப்பட்டது. இவ்விதம், **வடஅமெரிக்க இந்தியர்களின் அப்போஸ்தலனாகிய பிரெய்னார்டின்** நாட்குறிப்பிலிருந்து தனது ஆரம்ப ஆர்வத்தைப் பெற்ற பேசனின் தனது இருபதாம் வயதில் பிரெய்னார்டையும் தோற்கடிக்கும் வகையில் ஜெப வாழ்க்கை ஒன்றை ஆரம்பித்தார்..

ஆவிக்குரிய உலகில் பிரெய்னார்டின் இன்னொரு கனியாக **இராபர்ட் மர்ரே மச்செய்ன்** என்ற பக்தனைக் கூறலாம். இவரும் ஒரு ஜெப வீரனாக வாழ்ந்து தனது 29ம் வயதில் ''பூரண வயதுள்ளவராய்'' மரித்தார். நமது ஆத்துமா இவ்வுலகில் வகிக்கக் கூடிய பதவிகளிலெல்லாம் மேலான பதவியான ''உன்னத ஜெப வாழ்க்கைக்கு'' மச்செய்ன் கவர்ந்திழுக்கப்பட்டது, பிரெய்னார்டின் நாட்குறிப்பை வாசித்ததின் மூலமாகவே!

**பிரெய்னார்டின் கடைசி வார்த்தைகள்:** 1747 அக்டோபர் 2ம் நாள் தான் மரிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு தனது டைரியில் பிரெய்னார்ட் இவ்வாறு எழுதியிருக்கிறார்.

''என் ஆத்துமா இன்று தேவனோடு இனிமையாய் ஒன்றியிருக்கிறது. அவரது மகிமையைக் காணும்படியாய் அவரோடு இருக்க என் மனம் ஏங்குகிறது. நான் அதிகமாய் நேசிக்கும் நண்பர்களையும், என் ஆத்துமாவுக்குப் பிரியமான சபையையும், எனக்கு உண்டான யாவற்றையும் மனநிறைவோடு அவருக்கு அர்ப்பணித்து அவரது கரங்களில் தருகிறேன். அவரது ராஜ்யம் இவ்வுலகில் வரும்படிக்கும் அவர்கள் யாவரும் அன்பாய் இருக்கவும், அவரை மகிமைப்படுத்தவும், நேச இரட்சகர் தன் ஆத்தும பலனைக் கண்டு திருப்தியாகவும் சகலத்தையும் அவருக்கே அர்ப்பணிக்கிறேன்!. இயேசுவே! சீக்கிரம் வாரும்! ஆமென்!''

**பிரெய்னார்டின் கல்லறைக் கல் வாசகம்:** ''சஸ்க்யூஹென்னாவின்'' பழங்குடி செவ்விந்தியருக்கு அப்போஸ்தலனும், உண்மையும் உத்தமுமான ஊழியனும், கனத்துக்குரிய டேவிட் பிரெய்னார்டின் பரிசுத்த ஞாபகார்த்த கல்லறை..

''ஒரே ஒரு மனிதன் கிறிஸ்தவ உலகில் இத்தனை பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பாரானால், இவரைப் போல ஒரு சேனையே எழும்பினால் அது என்னென்னவெல்லாம் செய்யும் என்று எண்ணிப் பார்ப்பீர்களா?'' என்று Rev. பெர்னார்ட் ரேவன் ஹில் பிரெய்னார்டைக் குறித்து குறிப்பிட்டுள்ளார்.

# இனிவருங் காலம் வசந்த காலமாகட்டும்

காலையில் எழுந்து எப்பொழுதும் போல அலுவலகம் செல்ல தயாராகி கொண்டு இருந்தான். "சேகர்". அவனுடைய மனைவி இன்னும் கணவருக்கு பிடித்த உணவை தயார் செய்ய வேண்டும் என்பதற்காக மிக வேகமாக சமைத்து கொண்டு இருந் தாள். ஆனால் தினமும் செல்லும் நேரத்தை விட சற்று முன்னதாக புறப்பட்டான். இதைப் பார்த்த மனைவி "ஏன் இவ்வளவு சீக்கிரம் போகிறீர்கள்" என்று வினவினாள். அலுவலகத்தில் கொஞ்சம் வேலை இருப்பதாக சொல்லிக் கொண்டே கிளம்பினான். "நேற்றே சொல்லி இருந்தால் இன்னும் விரைவாக சமைத்து இருப்பேனே, கொஞ்சம் பொறுங்கள். சமையல் முடியப் போகிறது" என்றாள் மனைவி. "எல்லாம் உன்னிடம் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டுமா? எனக்கு ஆயிரம் பிரச்சனை இருக் கிறது. ஒருநாள் சாப்பிடாமல் போனால் ஒன்றும் செத்து விடமாட் டேன். போய் நீ நன்றாக சாப்பிடு!" என சொல்லி விட்டு விருட்டென்று வாகனத்தை எடுத்து சென்றான். மனைவி ஏதும் சொல்லாமல் உள்ளே சென்று, சமையலை முடித்து இறக்கி வைத்து விட்டு தானும் சாப்பிடாமல் துணிகளை துவைக்க சென்று விட்டாள்!

("சேகர் ஒரு தபால் அலுவலகத் தில் வேலை செய்கிறான், அவன் உடைய மனைவி வீட்டில் தான் இருக்கிறாள். இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள்... வீட்டில் பெற்றோர்கள் சம்மதம் கிடைக்கவில்லை. அதனால் பெற்றோ ரிடம் சண்டை போட்டு விட்டு தனக்கு சேரவேண்டிய சொத்தை பிரித்து வாங்கி கொண்டு தனியாக வந்து விட்டான்! இருவருக்கும் திருமணம் ஆகி 20 ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லை. இது பெரிய மன உளைச்சலாகவே இருந்தது "சேகருக்கு").

அலுவலகம் முடிந்து வீடு திரும்பி கொண்டு இருந்தான் சேகர் அலுவ லகத்தில் சில வேலைகளை தவறாக செய்ததால் மேலதிகாரி சேகரை எல்லோர் முன்னும் ரொம்ப திட்டி விட்டார்! அதை நினைத்தபடியே வீடு வந்து சேர்ந்தான். மனைவி ஆவ லோடு தான் சமைத்த உணவை எடுத்து வந்து பரிமாறத் துவங்கினாள். இவனும் சாப்பிட உட்கார்ந்தான். சாப்பிட ஆரம்பித்த கொஞ்ச நேரத் திலேயே தட்டை எடுத்து தூக்கி சுவர் மீது அடித்தான். அவள் அப்படியே உறைந்து போய் நின்றாள்! "உண வில் காரம் எவ்வளவு போட்டு இருக் கிறாய். உனக்கு சமைக்க தெரியா தா" என்று கத்தி பேச தொடங் கினான். (உணவு அவ்வளவு காரம் இல்லை, ஆனால் அவன் அலுவலகத் தில் நடந்ததை நினைத்து கொண்டே சாப்பிடவும் தான் அது அவ்வளவு

காரம் ஆகிவிட்டது) "உன்னால் ஒரு காரியம் ஒழுங்காக செய்ய முடியாதா. எல்லாம் என் விதி உன்னோடு வாழ வேண்டும் என்பதற்காக என் உறவுகளை எல்லாம் தூக்கி எறிந்தேன். உன்னால் ஒரு குழந்தை பெற்று எடுக்கும் பாக்கியம் கூட இல்லை. உன்னை திருமணம் செய்து கொள்ளாமலே இருந்து இருக்கலாம். என் பெற்றோர் பேச்சை அப்பொழுதே கேட்டு இருக்கலாம். உன்னால்தான் என் வாழ்க்கை இப்படி "இருளாக" மாறி விட்டது. அலுவலகத்திலும் இவ்வளவு ஆண்டு சம்பாதித்து உனக்குத்தானே கொட்டுகிறேன். என்ன பண்ணுவது காதலித்து விட்டேன் அல்லவா! இன்னும் நிறைய சம்பாதித்துக் கொட்டுகிறேன். நன்றாக கொட்டிக்கொள்" என அடிக்கிக் கொண்டே போனான். அறை கதவை வேகமாக மூடி விட்டு உள்ளே சென்றுவிட்டான்! மனைவி கண் கலங்கியபடி "தானும் எல்லோரையும் விட்டு தானே வந்தேன்" என மனதில் நினைத்து கொண்டே கண்ணீர் தரையில் விழுந்தபடி வீட்டை சுத்தம் செய்து கொண்டு இருந்தாள்! மனைவியும் சாப்பிடாமல் அப்படியே தரையில் படுத்து உறங்கிவிட்டாள்! மறுநாள் காலையில் எழுந்து மறுபடி அவளது பணியை செய்ய ஆரம்பித்தாள். சேகர் எதுவும் பேசாமல் செய்து வைத்த சமையலை எடுக்காமல் விருட்டென்று கிளம்பி போய் விட்டான்! அலுவலகம் சேர்ந்த பிறகு தனது பணியை ஆரம்பித்தான்.

அப்பொழுது ஒரு வயதான முதியவர் தலையில் பழகூடையை சுமந்த படி வியர்வை சொட்ட, சொட்ட வந்தார். மதியநேரம் உச்சி வெயில் வேறு. பழகூடையை இறக்கி வைத்துவிட்டு, அலுவலகத்தின் உள்ளே வந்தார்! தனது சட்டை பையில் இருந்த பணத்தை எடுத்து மேசையில் வைத்தார். (பணம் அவரது வேர்வையில் நனைந்து இருந்தது) இதைக் கண்ட சேகருக்கு ஒரே ஆச்சரியம்! இவ்வளவு வயதான காலத்தில் யாருக்கு இப்படி உழைக்கிறார் என்று? அதை மனதில் நினைத்துக் கொண்டே "உங்களுக்கு நான் என்ன உதவி செய்ய வேண்டும் ஐயா" என்று அவரிடம் வினவினான். அந்த முதியவர் கடந்த மாதம் பணம் அனுப்பிய ரசீதை காண்பித்து "இதே முகவரிக்கு பணம் அனுப்ப வேண்டும்" என்று சொல்லிவிட்டு, அதோடு ஒரு கடிதத்தையும் கொடுத்தார். அந்த ரசீதை கண்ட சேகருக்கு ஒரே அதிர்ச்சி! (அது ஒரு முதியோர் இல்லத்தின் முகவரி) சேகருக்கு இதயம் வேகமாக துடிக்க ஆரம்பித்தது! "இது எதற்காக, ஏன் அனுப்புகிறீர்கள்" என்று கேட்க வேண்டும் என்கிற ஆவல் அவனை பிடித்துக்கொண்டது. தயங்கியபடியே "ஐயா, இதை கேட்க கூடாது தான். இருந்தாலும் என் மனம் கேட்க வேண்டும் என்று துடிக்கிறது. உங்களிடம் ஒன்று கேட்கலாமா? என்று குரல் தாழ்த்தியபடி கேட்டான். அவரும் "சொல்லுங்கள் தம்பி"

என்றார். நீங்கள் யாருக்கு பணம் அனுப்புகிறீர்கள்! உங்கள் மனைவிக் காகவா? என்றான். அந்த முதியவர் ஆச்சரியமாக சேகரைப் பார்த்தார்! "சேகருக்கு ஒன்றுமே புரியவில்லை. தவறாக கேட்டு விட்டோமோ? என்று நெஞ்சம் படபடத்தது! **"நான் இருக்கும்போது என் மனைவியை அப்படி விட்டு விடுவேனா? தம்பி"** என்று சற்று கம்பீரமாக அந்த முதியவர் சொன்னார். "சேகர்" அமைதியாக அவர் சொல்வதை கேட்க ஆரம்பித்தான். முதியவர் சொல்ல ஆரம்பித்தார். "நான் இந்த முதியோர் இல்லத்திற்கு கடந்த 10ஆண்டாக பணம் அனுப்புகிறேன். இன்று வரை யாரும் இந்த கேள்வியை கேட்டது இல்லை. முதல் முறையாக நீங்கள் கேட்டது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது" என்று சற்று உற்சாகமாக சொல்ல ஆரம்பித்தார். "எனக்கு திருமணம் ஆகி 40ஆண்டுகள் ஆகின்றன. என் மனைவி என் கூட தான் இருக்கிறாள், எங்களுக்கு குழந்தைகள் இல்லை. என் மனைவிக்கு வாய் பேச முடியாது. எங்கள் திருமணம் ஒரு சுவாரசியமான நிகழ்வு தம்பி" என்று கூறியவர் கொஞ்சம் தண்ணீர் கேட்டார் சேகரிடம். மிக விரைவாக ஓடி தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். சேகர். சேகர் நாற்காலியின் நுனியில் அமர்ந்தபடி "உங்களின் திருமணம் எப்படி நடந்தது. உங்கள் மனைவியை எப்படித் தெரியும். அதையும் சொல்லுங்கள் ஐயா! எனக்கு ஆவலாக இருக்கிறது" என்று முதியவர் தண்ணீர் குடித்து முடிப்பதற்குள் சொல்லி முடித்தான். முதியவர் சற்று சிரித்தபடி மேலே சிந்திய நீரை துண்டினால் துடைத்தபடி மீண்டும் சொல்ல ஆரம்பித்தார்! "என் மனைவியை சிறு வயதிலேயே தெரியும். எங்கள் வீட்டின் அருகில் தான் குடும்பமாய் இருந்தார்கள். அந்த வீட்டில் இவள் ஒரே பிள்ளை தான். அவளுக்கு 10வயதாக இருந்த பொழுது அவளுடைய தந்தையோடு வெளியே சென்று விட்டு வீடு திரும்பும் வழியில் வாகனம் மோதி அவர் தந்தை இறந்துவிட்டார். தன் கண் முன்னே தந்தை இறந்து போனதைக் கண்ட அவளுக்கு பேச்சு வராமல் போய்விட்டது. அதன் பிறகு அவளுடைய தாய் பல வீட்டு வேலைகளை செய்து அவளை வளர்த்தார். இவளும் வளர்ந்து பெரியவளாகி விட்டாள்.

அவளுடைய குறையை பார்த்த யாருக்கும் அவளின் அன்பு தெரியவில்லை. அவளுக்கு எல்லோரும் தன்னிடம் பேச வேண்டும் என்கிற ஆசை இருக்கும். ஆனால் யாரும் பேசத்தான் மாட்டார்கள்! அவளின் தந்தை மரணத்திற்கு பிறகு உறவுகள் எல்லாம் அவரவர் வேலையை பார்க்க சென்று விட்டனர். திருமண வயது வந்தது. ஆனால் பேச முடியாத காரணத்தால் அவளை திருமணம் செய்ய யாரும் முன் வரவில்லை.

பிறகு எங்கள் பெற்றோர்கள் பேசி இருவருக்கும் திருமணம் நடந்தது. பிறகு காலங்கள் கடந்தது எங்களை பெற்றவர்கள் எல்லாம் இறந்து விட்டார்கள்! எங்களுக்கும் வயது ஆகிவிட்டது. ஆனால் என் மனைவி ஒரு குழந்தை மாதிரி..தம்பி'' என்று சொன்னவர் குரலில் ஒரு தடு மாற்றம். (கையில் வைத்து இருந்த துண்டை எடுத்து கண்களை லேசாக துடைத்தார்). (சேகரின் உள்ளத்தில் ஏதோ ஒன்று குத்த ஆரம்பித்தது) தன்னை நிதானித்து கொண்டு மீண்டும் சொல்ல ஆரம்பித்தார். ''அவளுக்கு உலகமே நான் மட்டும் தான், என்னைத் தவிர வேறு யாரையும் தெரியாது. ஒருமுறை நான் உடல் நலம் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருந்தேன். வேலைக்கு செல்லாமல் கையில் பணம் வேறு இல்லை. அப்பொழுது மருந்து வாங்க வேண்டும் என்ப தற்காக அவள் அம்மா நினைவாக வைத்து இருந்த ஒரு தங்ககுண்டு மணியை எனக்காக கடையில் விற்றுவிட்டாள். பிறகு அந்த பணத்தை கொண்டு மருத்துவரிடம் சென்று ''என் கணவனை எப்படி யாவது காப்பாற்றுங்கள்'' என்று வாய் பேச முடியாத நிலையிலும் செய்கையை காண்பித்து மருத்து வரிடம் கெஞ்சி புழுவாக துடித்து போய்விட்டாள்! (என்று சொன்னவர் கண்கள் இரண்டும் சிவந்து போய் விட்டது) பிறகு நான் குணமாகி என் வேலையை செய்ய ஆரம்பித்தேன் என்று தன்னை திடப்படுத்திக் கொண்டு மீண்டும் தொடர்ந்தார். அப்பொழுது தான் எனக்கு ஒரு சிந்தனை வந்தது. எனக்கு முன்பு அவள் இறந்துவிட்டால் பரவா யில்லை. கடைசிவரை அவளை பார்த்துக்கொண்ட மனநிறைவு இருக்கும். ஆனால் அவளுக்கு முன்பே எனக்கு இறப்பு வந்தால் என் மனைவியின் நிலை என்ன என்று? அதற்கு தான் இந்த பணம். ஒவ் வொரு மாதமும் ஒரு தொகையை அனுப்பி விடுவேன். அதில் பாதி அந்த முதியோர் இல்லத்தில் கணவன் இல்லாமல் இருக்கும் மற்றவர் களுக்கும் மீதி பாதி தொகையை என் மனைவிக்காக சேர்த்து அந்த பணத் தோடு ஒரு கடிதம் கொடுத்தேன் அல்லவா! அதை திறந்து படித்து பாருங்கள் தம்பி'' என்றார். சேகர் நெஞ்சில் ஒரு உறுத்தல். கைகள் நடுங்கியபடி கடிதத்தை பிரித்து பார்த்தான்! அவன் கண்கள் இரண்டும் கலங்கியபடி இருந்தது!

அதில்.. ''நானும், என் மனைவி யும் நலமாக உள்ளோம். இந்த மாதம் என்னால் இயன்ற தொகை அனுப்பி உள்ளேன். அடுத்த மாதம் இதே போல் கடிதமும், பணமும் வர வில்லை என்றால்....நான் இறந்து போய் இருப்பேன்... நீங்கள் வந்து என் மனைவியை அழைத்து சென்று பத்திரமாக குழந்தை போல் கடைசி வரை பார்த்துக் கொள்ளுங்கள் இதுவே என் கடைசி ஆசை''.

இதை படித்த சேகருக்கு நெஞ்சில் பாரம் கூடியது. கை, கால் நடுங்க ஆரம்பித்தது. கலங்கிய கண்களோடு அந்த முதியவரைப் பார்த்தான். "சரி தம்பி, எனக்கு நேரம் ஆகிவிட்டது. அதை அனுப்பிவிடுங்கள். ஒரு உதவி செய்ய வேண்டும்" என்றார் அந்த முதியவர். என்ன செய்யவேண்டும் ஐயா என ஆவலோடு கேட்டான். "வெளியில் நான் வியாபாரம் செய்யும் பழக்கூடை இருக்கிறது. அந்த பழக் கூடையை கொஞ்சம் தூக்கிவிட முடியுமா" என்றார். நெஞ்சில் ஒரு பெரிய பாரத்தோடு அவன் அமர்ந்து இருந்த அலுவலக கூண்டை விட்டு வெளியே வந்தான். வெளியே வந்து பார்த்த சேகருக்கு பெரிய அதிர்ச்சி! அந்த முதியவருக்கு இடது கை இல்லை! (இவ்வளவு நேரம் அவருக்கு கை இல்லாததை சேகர் கவனிக்கவே இல்லை. அவ்வளவு ஆர்வமாக அவர் சொன்னதை மட்டும் தான் கேட்டுக் கொண்டு இருந்தான்) கண்கள் கலங்கியபடி அந்த கூடையை தூக்கி அவர் தலையின் மீது வைத்தான். அது கொஞ்சம் சுமை அதிகமாகவே இருந்தது.

மனைவி மீது இவ்வளவு அன்பு வைத்து இருக்கிறீர்கள். உங்களுக்கு ஒரு குழந்தையும், கொஞ்சம் சொத்தும் இருந்து இருந்தால் இன்னும் எவ்வளவு நன்றாக இருந்து இருக்கும்! நீங்கள் உங்கள் மனைவிக்காக இவ்வளவு கஷ்டப்பட தேவையில்லையே" என்று குரலில் ஒரு நடுக்கத்தோடு சொன்னான்.

இதைக் கேட்ட முதியவர் சற்று சத்தமாய் சிரித்தார். "ஆ..ஆ..ஆ. **என் மனைவி நம்பி வந்தது என்னைத் தான்! சொத்தையோ! அல்லது பிள்ளையையோ இல்லை!** அவளுக்காக சுமக்கின்ற இந்த சுமையும் ஒரு சுகமே!" என்று சொல்லிகொண்டே உச்சி வெயிலில் உற்சாகமாக பழக்கூடையை தலையில் வைத்தபடி ஒரு கையால் பிடித்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தார்! அந்த முதியவர்.

சேகரின் கண்களில் கலங்கி நின்ற நீர்! பெருந்துளியாய்! **தரையில் விழுந்தது! தரையில் விழுந்தது கண்ணீர் துளி மட்டும் அல்ல! அவனின் சுபாவமும்!**

"வறுமையில் கணவனை நேசிக்கும் பெண்ணும், முதுமையில் மனைவியை நேசிக்கும் ஆணும் தான், உலகின் சிறந்த காதல் ஜோடிகள்!" கொண்டு செல்ல ஒன்றும் இல்லை இவ்வுலகிற்கும் கொடுத்து செல்வோம் உண்மையான அன்பை! இனிவரும் நாட்கள் வசந்த காலமாகட்டும்!

**"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்... புருஷர்களும் தங்களை மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து அவர்களில் அன்புகூரவேண்டும்...தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே" (எபே.5:25,28,29).**

- வாட்ஸ் அப் செய்தி... ●

# நம்மை நிதானித்தறிவோம்

சீனாவில் ஒரு ஊரிலே பத்து விவசாயிகள் இருந்தார்கள். ஒருநாள் அவர்கள் அடுத்து அடுத்துள்ள தத்தம் நிலங்களில் உழவுவேலை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது வானம் இருட்டிக்கொண்டு வந்தது. பயங்கர மின்னலுடன் இடி இடித்தது. இடிமின்னலின் உக்கிரம் அதிகமாவதைக் கண்டு பயந்து போன அவர்கள் பக்கத்திலுள்ள ஒரு பாழடைந்த மண்டபத்தில் ஓடி ஒளிந்து கொண்டார்கள். வெகு நேரமாகியும், மின்னல் வெட்டுவதும், இடி இடிப்பதும் நிற்கவில்லை. அவற்றின் உக்கிரம் அதிகரித்துக் கொண்டே போனது. பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்த விவசாயிகளில் ஒருவன், நம்மிடையே ஒரு மகாபாவி இருக்கிறான். அவனைக் குறிவைத்துதான் கடவுள், இடியையும், மின்னலையும் ஏவுகிறார். அந்தப் பாவியை வெளியே அனுப்பிவிட்டால், நாம் பிழைத்துக் கொள்ளலாம் என்று ஆலோசனை சொன்னான். மற்றவர்கள் இதனை ஆமோதித்தார்கள். நம்மில் அந்த பாவியை எப்படி அடையாளம் கண்டு கொள்வது என்று விவாதம் நடந்தது. விவாதத்தின் முடிவிலே, அதைக் கடவுளிடமே விட்டுவிடுவது என்று முடிவாயிற்று. அதன்படி அனைவரும் தங்களுடைய தொப்பிகளை கையில் பிடித்துக்கொண்டு, தொப்பியை மட்டும் மழையில் நீட்டுவது என்று முடிவாயிற்று. அனைவரும் தங்களுடைய தொப்பிகளை மழையில் நீட்டினர்.

பயங்கரமான இடிமுழக்கத்துடன் ஒரு மின்னல் வெட்டியது. அதில் ஒரு விவசாயியின் தொப்பி மட்டும் எரிந்து சாம்பலாயிற்று. மற்ற 9 விவசாயிகளும், இவன்தான் பாவி, இவனை முதலில் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுங்கள் என்று கத்திக்கொண்டே அவன் மீது பாய்ந்தனர். அந்த விவசாயி கெஞ்சி, கதறி, நான் அப்பாவி என்று மன்றாடினான். மற்ற யாரும் அதைக் காதில் போட்டுக்கொள்ளவே இல்லை. அவனை பலவந்தமாக கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினார்கள். அவன் கதறிக்கொண்டு மழையிலே ஓடினான். அப்போது அதிஉக்கிரமாக ஒரு மின்னல் தாக்கி, இடி இடித்தது. ஓடிக் கொண்டிருந்த விவசாயி அதிர்ச்சியில் ஸ்தம்பித்து நின்றுவிட்டான். மண்டபத்தை திரும்பிப் பார்த்தான். மண்டபத்தில் இடிவிழுந்து நொறுங்கியதோடு 9 விவசாயிகளும் கருகி நொடிப்பொழுதில் செத்துக் கிடப்பதைக் கண்டான். “கடவுளே, அவர்களோடிருந்து மொத்தமாக நானும் அழிந்துபோகாமல் என்னை வெளியேற்றி என்னை காப்பாற்றினீரே” என்று நன்றியோடு சத்தமிட்டான். அவர்கள் அனைவருடைய அழிவை எண்ணி பரிதவித்தான். அடுத்தவரை குற்றவாளி என்று தீர்க்க நாம் யார்? நம் பாவத்தை உணர்ந்து மனந்திரும்பி நாம் வாழ்வோம். - **நன்றி:** TWT செய்திகள், இணையதளம்

“நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும் (மத்.7:1,2) ●

# நம் கிறிஸ்தவ வாழ்க்கை நன்றி நிறைந்த வாழ்க்கையாய் இருக்கிறதா?

**"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது" 1 தெச.5:18**

தமிழ் வேதாகமத்தில் நன்றி என்கிற பதம், துதி, என்கிற சொல் லால் குறிக்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் 102 இடங்களிலும் புதிய ஏற்பாட்டில் 71 இடங்களிலும், இப்பதம் இடம் பெறுகிறது.

பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு சிறுவயதிலேயே கற்றுக்தரும் வார்த்தை "Thank you" என்பது. இந்த வார்த்தையின் மேன்மை யையும் வலியுறுத்தவே இதை கற்றுக்கொடுக்கிறோம். நாம் எல்லோரும், நமது உறவுகளைக் காக்கவும் பாராட்டைத் தெரிவிக்கவும் சக மனிதர்களுக்கு நன்றி சொல் கிறோம். இது அவசியமே. அப்படி யானால் நம்மைப் படைத்து, காத்து, நித்தம் தாங்கி, ஏந்தி வருகிற நம் தேவனுக்கு நன்றி சொல்வது எத் துணை அவசியம்? இதை உணர்ந்து தான் பரி.பவுல், நன்றி செலுத் துங்கள்; இது தேவனுடைய சித்தம் என்று, சொல்லி அதில் பெருகவும் நம்மை அழைக்கிறார் (கொலோ.2:7).

நாம் பெற்று அனுபவிக்கிற எந்த நன்மையும் நம்மால் உண்டான தல்ல என்று அறிவோம். நாம் அதிசய மாய் படைக்கப்பட்டிருப்பதையும் நம் சரீர அவயவங்கள் எல்லாம் செயல் படுகிற அதிசயத்தையும், சற்று சிந்திப் போமானால், நாம் விழித்திருக்கும் ஒவ்வொரு விநாடியும், நாம் சுவா சிக்கும் ஒவ்வொரு விநாடியும், கட வுளை நன்றியோடு துதிக்கும்படி தூண்டப்படுவோம். குறிப்பாக, இந்த கொரோனா காலகட்டத்தில் நாம் தப்பித்துப் பிழைத்திருப்பது, அவ ருடைய சுத்த கிருபை என்று உணர் வோமானால் கடவுளை துதிக்காமல் இருக்க முடியாது. ஆசிசி தந்தை பிரான்சிஸ் (Francis of Assissi) தான் குளிக்கும் தண்ணீருக்குக் கூட நன்றி சொல்லித்தான் குளிப்பார் என்று அவர் சரிதையில் காண்கிறோம்.

### நாம் நன்றி சொல்வது, ஆண்ட வருக்குப் பிரியம்: 2

(லூக்.17:17) குஷ்டம் நீக்கி நன்றி சொல்ல வந்த சமாரியனிடம், சுகம் அடைந்தவர்கள் 10 பேர் அல்லவா? மற்ற 9 பேர் எங்கே? என்று வினவு கிறார். இதன் பொருள் என்ன? பெற்றுக்கொண்ட நன்மைக்கு நன்றி சொல்வதை நமது ஆண்டவர் எதிர் பார்க்கிறார் என்பது தானே! "A Serious call to a Devout and Holy life" என்கிற தமது ஆங்கில வெளியீட்டில் வில்லியம் லா (William Law) என்ப வர் கடவுளுக்கு நன்றி சொல்லுவதன்

சிறப்பை கீழ் வருமாறு விளக்குகிறார். மகாபெரிய பரிசுத்தவான் யார்? அதிகம் கொடுப்பவனோ, அதிகம் உபவாசிப்பவனோ அல்ல. நீதியாய், சாந்தமாய், நடப்பவனும் அல்ல. பதிலாக கடவுளின் சித்தமே என் சித்தம்; கடவுள் எனக்குக் கொடுப்பது எல்லாமே என் நன்மைக்கே என்று விசுவாசித்து எந்த செயலிலும் கடவுளுக்கு முழுமனதுடன் நன்றி சொல்லுபவனே. அற்புதம் செய்யும் வரத்தைப் பெற்றவனை விட, எப்போதும் நன்றியுடன் வாழ்பவனே கிறிஸ்தவ குணதிசயங்கள் அனைத்தையும் பெறுகிறான். ஆண்டவருக்கு நன்றி சொல்வது எத்தனை மேன்மையானது என்பதை இதில் காண்கிறோமல்லவா?

### பாடுகள், போராட்டங்கள், பிரச்சனைகள் மத்தியிலும் கடவுளுக்கு நன்றி சொல்லி, துதிக்க முடியுமா?

இதற்கான பதிலை, அப்.16:18, சங்.34, யோபு 1:21 போன்ற பகுதிகள், தருகிறதைப் பார்க்கிறோம்.

பரிசுத்த பவுலும், சீலாவும் நியாயமில்லாமல் சிறையில் அடைக்கப்பட்டு, அவர்களின் கால்கள் தொழுமரத்தில் கட்டிவைக்கப்பட்ட நிலையில், அவர்கள் ‘‘ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள் (அப்.16:18) என்று காண்கிறோம். இது போல், சவுல் மன்னன், கொலைவெறியோடு தாவீதை தொடரும் போது, தாவீது குகையில் ஒளிந்து கொண்டிருக்கும் நிலை. ‘‘கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன், அவர் துதி எப்போதும் என் வாயி லிருக்கும்’’ என்று பாடி மகிழ்கிறதைக் காண்கிறோம் (சங்.34:1). யோபு தனக்குள்ள எல்லாவற்றையும் இழந்த நிலையில், ‘‘கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்’’என்று கர்த்தரை துதிக்கிறதைப் பார்க்கிறோம் (யோபு 1:21).

**குறிப்பு:** ‘‘ஜெபிக்கும்போது நாம் மனிதர்களாகவும், துதிக்கும்போது தேவதூதர்கள் போலும் செயல்படுகிறோம்’’ என்று THOMAS WATSON பிரசங்கியார் குறிப்பிடுவதை மனதில் கொள்வோம்.

மேற்குறிப்பிட்ட பாத்திரங்களின் உபத்திரவங்கள் நமக்கு ஏற்படவில்லை. அவர்களே, கடவுளுக்கு நன்றி சொல்லி துதித்தார்கள் என்றால் நாம் எத்தனை அதிகமாய், சொல்ல வேண்டும் என்பதை நினைவில் கொள்வோம்.

JOSEPH BARBER LIGHTFOOT என்கிற வேதபண்டிதர் “Thanks giving to God, is the end of all human conduct, whether in words or in works” என்றுரைப்பதன் மூலம் கிறிஸ்தவ வாழ்வின் மையமே கடவுளுக்கு நன்றி சொல்வது என்பதை நமக்கு உணர்த்துகிறதல்லவா? William Barclay - இது பற்றி கூறும்போது கிறிஸ்தவ வாழ்

வையும் கடவுளுக்கு நன்றி சொல்வதையும், ஒன்றிலிருந்து மற்றொன்றை பிரிக்க முடியாது என்பார்.

**ஆனாலும், நாம் ஏன் நன்றி மறந்து வாழ்கிறோம்?**

1. நாம் பெற்றிருக்கும் எல்லா மேன்மையும், அடைந்திருக்கும் எல்லா நன்மைகளும், நம் முயற்சியால் வந்தவையே என்கிற மேட்டிமையான சிந்தனையா? தாவீது, கடவுள் அனுமதித்தால் மட்டுமே எந்த நன்மையும் பெற முடிந்தது என்பதை நாம் அறியாததல்ல பிர.9:11; நீதி.21:31; 2 சாமு.7:18 மேட்டிமையான எண்ணமும், வீண் பெருமையும், நன்றி சொல்வதற்கு தடையாய் அமைகின்றன.

2.கடவுளின் கிருபை எல்லையற்றது - அவர் அதை நிறுத்துவதே கிடையாது. ஆகையால் கடவுளுக்கு நன்றி சொல்லத் தேவையில்லை என்கிற தவறான கருத்து. இப்படிப் பட்டவர்களுக்கு உபா.28:47-48 எச்சரிக்கையாய் அமைகிறது.

3. எது நடந்தாலும் தற்செயலாய் நடக்கிறது: இந்த சிந்தனை நன்றி சொல்வதற்கு தடையாக மட்டும் அல்ல, கடவுள் தம்மோடு இடைப் படுகிறதையும் அவமதிக்கிறதாய் இருக்கிறது. ஆனால் முதிர்ச்சிபெற்ற கிறிஸ்தவன், இப்படிப்பட்ட தாறுமாறான சிந்தனைகளை தூரப் படுத்தி, எந்த நன்மையான ஈவும் ஆசீர்வாதமும் கிறிஸ்து அல்லாமல் எனக்கு கிடைப்பது இல்லை என்பதை அறிந்து, உணர்ந்து, நித்தமும் நன்றியுடன் வாழ வேண்டியவனாய் இருக்கிறான்.

**கடவுளுக்கு நன்றி சொல்லி வாழும்போது நாம் பெற்றுக் கொள்ளும் ஆசீர்வாதங்கள்:**

**1. நன்றி சொல்லுகிறவன் - தேவனை மகிமைப்படுத்துகிறான்** நன்றி சொல்லுகிறவன், கடவுளிடம் இருந்துபெற்ற நன்மையை அல்ல, கடவுளையே போற்றுகிறான். இதனால் தேவன் மகிமைப்படுகிறார்.

**2. நன்றி சொல்லுதல் - நம் ஆன்மீக கண்களை திறந்துவிடுகிறது.** துதிக்க, துதிக்க. எந்த அளவுக்குத் துதிக்கிறோமோ அந்த அளவுக்கு கடவுள் தம்மை வெளிப் படுத்துகிறார் என்பது விசுவாசிகளின் அனுபவம். அப்படி ஆண்டவர் தம்மை வெளிப்படுத்தும்போது அதன் பலனாக ஆன்மீக அனுபவம் அதிகரிக்கிறது.

3. **நன்றி சொல்லுதல் - சமாதானத்தை கொண்டு வருகிறது** நன்றி சொல்லுகிறவன் எவனும் ஆண்டவரை முழுமையாய் நம்புவதால், இந்த நம்பிக்கைமூலம், சமாதானத்தை பெற்றுக்கொள்கிறான் பிலி.4:6-7.

**4. நன்றி சொல்லுதல் - போதுமென்ற மனதிருப்தியைத் தருகிறது** ஒருவன் கடவுளைத் தனக்குப் போதுமானவர் என்று ஏற்று, அவருக்கு

நன்றி சொல்லுகிற வேளையில் அவரே போதுமானவராய் ஆகிறார். போதுமென்ற மனதோடு கூடிய தெய்வ பக்தியை பெற்றுக் கொள் கிறான்.

**5. நன்றி சொல்லுதல் - நமது விசுவாசத்தை விசாலமாக்குகிறது** நன்றி சொல்லி துதிக்க, ஆண்ட வரின் அன்பையும் ஆளுகை யையும் உணர்வதன் மூலம் ஒரு வரின் விசுவாசம் ஆழமாகிறது.

**6. நன்றி சொல்லுதல் - வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க் கைக்கு வித்திடுகிறது.** இதற்கு பரிசுத்தவான்களின் வாழ்வே சாட்சி. இந்த நன்மைகளைக் கருதிதான் John Herbert “ஆண்டவரே எங் களுக்கு எவ்வளவோ கொடுத்திருக் கீங்க; இன்னும் ஒன்று மட்டும் கேட்கிறோம். நன்றியுள்ள இதயத்தை தாங்க” என்று ஜெபிக் கிறார். Bro.D.ஜஸ்டின் பிரபாகரன் பாடுவதுபோல “எத்தனையோ நன் மைகளை நம் வாழ்வில் செய்தாரே, ஏராளமாய் நன்றி சொல்வோம்” “நன்றி சொல்லாமல் இருக்கவே முடியாது” என்று பாடி நித்தமும் கடவுளுக்கு நன்றி செலுத்துவோம்.

**7. நன்றி சொல்லுதல் -சாட்சி பகர்தலாகும்** நாம் வெளிப்படையாக ஆண்டவருக்கு நன்றி சொல்லி, அவர் எனக்கு இதைச் செய்தார் என்று அறிக்கையிடும்போது, நம்மைச் சுற்றி யுள்ளோருக்கு, தனிப்பட்ட முறையில் நம்மேல் அக்கறையுள்ள ஆண்டவர் உண்டு என்று சாட்சி பகர்கிறோம். ஒவ்வொரு கிறிஸ்தவனும், கடவுளின் திட்டத்தால் அவருக்கு சாட்சியாய் இருக்கும்படி அழைக்கப்பட்டவன் தானே. நன்றி சொல்லுதல் - இதற்கு துணைபுரிகிறது.

“எல்லாவற்றிலும் நன்றி செலுத் துங்கள் அப்படி செய்வதே கிறிஸ்து ஏசுவுக்குள் நம்மைக்குறித்து தேவ னுடைய சித்தமாயிருக்கிறது”. ●

**கர்த்தரின் கிருபையில்,**

**- Dr. J. Johnson Sundararaj, Ph.D.**
Former Vice-Principal,
American college,
Mo: 9843680054

- 28ம் பக்கத் தொடர்ச்சி....

கடைசியில் காவல் துறை அவனைக் கொலைகாரன் என்று கண்டு பிடிக்காவிட்டாலும் தானே சென்று சரணடைந்தான். அவன் சிறைக்குச் செல்லும் பொழுது, சோனியா சிறையில் வாசிக்கும்படியாக, புதிய ஏற்பாடு ஒன்றை அவனிடம் கொடுக்கிறாள். அவன் கொலைகாரனாக இருந்தபோதும் அவன் வாழ்க்கை துக்கம் நிறைந்ததாக இருந்தது. அவன் செய்த கொலையை அது நியாயப்படுத்தாவிட்டாலும் டாஸ்டோவ்ஸ்கி தன்னுடைய கதாபாத்திரங்கள் வழி யாக, மிகக் கேவலமான கொலைகாரனும் கூட இயேசு தரும் மன்னிப்பைப் பெற்று, சமாதானத்தையும் சந்தோஷத்தையும் அடைய முடியும் என்பதை உலகிற்குக் கற்பிக்கிறார். - தொடரும்

- சகோதரி. லாரா டிலனோ, lauradelano@yahoo.com ●

# உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்

**"ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்."** - (மல்கியா 4:2)

- டாக்டர்.பால்.N

அவருடைய நாமத்துக்கு பயந்திருக்கிற உங்கள்மீது நீதியின் சூரியன் உதிக்கும் என்று ஆண்டவர் சொல்லுகிறார். அவருடைய நாமத்திற்கு மதிப்பு கொடுத்து, அஞ்சி வாழும்பொழுது, தேவனுடைய கண்கள் நம்மையே நோக்கிக் கொண்டிருக்கின்றன.

**நீதியின் சூரியன் என்றால் என்ன? ஆரோக்கியம் என்றால் என்ன?**

1870-ம் ஆண்டு பிறந்த ஜான் க்ரஹாம் லேக் என்கிற ஒரு வாலிபன், தன்னுடைய 25-வது வயது நிறையும்பொழுது, தன்னோடு பிறந்த 15 சகோதர சகோதரிகளில் 8 பேரை இழந்திருந்தார். பல்வேறு விதமான நோய்கள் அவருடைய குடும்பத்தைத் தாக்கியதால், நோய், சாவு என்று மாறி மாறி வந்தது. சாவைக் கண்டாலே அவருக்கு வெறுப்பு உண்டானது. இவ்வாறு நோயையும் சாவையும் வெறுத்து அவர் வாழ்ந்து கொண்டிருந்த நேரத்தில், நம்முடைய தேவாதி தேவன் சுகமளிக்கும் தேவன் என்பதை அவர் அறியாதிருந்தார். ஒருநாள், சுகமளிக்கும் வல்லமையைப் பெற்ற ஜான் அலெக்சாண்டர் லூவி என்கிற தேவனுடைய ஊழியர் நடத்தும் சுகமளிக்கும் ஆராதனையில் கலந்து கொண்ட தன்னுடைய சகோதரி, மார்பக புற்று நோயிலிருந்து அற்புதமாக சுகமடைந்ததை தன் கண்களால் கண்டு, அன்று முதற் கொண்டு, தேவாதி தேவன் இயேசு கிறிஸ்துவின் பேரில் விசுவாசம் வைக்க ஆரம்பித்தார். தினமும் வேதாகமத்தை மீண்டும் மீண்டும் படித்தார். அந்நாளில் நோயுற்றவர்கள் இறை அருளினாலேயே சுகத்தைப் பெற்றுக்கொள் கிறார்கள் என்கிற விசுவாசம் அவர் அங்கம் வகித்த திருச்சபையில் இருந்தது. ஆனால், அவர் வேதத்தை வாசித்த பொழுது ஒரு அற்புதமான சத்தியத்தைக் கற்றுக்கொண்டார். **"நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்"** (அப்.10:38). அந்த வேத வசனத்தை படித்தபொழுது, அவருக்குள் அவருடைய ஆவி துள்ளிக் குதித்தது. மனமகிழ்ச்சியினால் நிறைந்

தார். காரணம் என்னவெனில், நோய் பிசாசின் வல்லமையினால் வருகிறது. ஆகவே, இயேசு கிறிஸ்துவானவர், பிசாசின் வல்லமையினால் அகப்பட்ட, நோயுற்ற அனைவரையும் குணமாக்கினார் என்று வேதம் கூறுகிறது. தேவன் ஒருபோதும் நோயைத் தருவதில்லை. இயேசு கிறிஸ்துவானவர் நோயுற்றவர்களை குணமாக்கவே விரும்புகிறார் என்பதை அவர் அறிந்துகொண்டார்.

எனக்கு பிரியமானவர்களே, ஜான் க்ரஹாம் லேக் அறிந்துகொண்ட அந்த சத்தியம், அவரை விசுவாசத்தில் அதிகமாய் வளரச் செய்தது. அதன் பின்பு அவர் நன்றாக ஜெபிக்க ஆரம்பித்தார். ஒருநாள், இன்னொரு சகோதரியும் திடீரென நோய்வாய்ப்பட்டு இறந்துபோகும் தருவாயில், ஐயோ, சகோதரியை சுகமளிக்கும் ஆராதனைக்கு அழைத்துச்செல்ல முடியவில்லையே என்று அவர் அங்கலாய்த்து சுகமளிக்கும் வல்லமை பெற்ற அந்த ஊழியருக்கு ஒரு தந்தி அனுப்பி, ஜெபிக்க சொன்னார். இவரும் முழங்கால்படியிட்டு தேவனிடத்தில் மன்றாடி, வேத வசனத்தை ஆதாரமாகக் கொண்டு, பரலோகத்தை அசைக்கும்படியான ஒரு வல்லமையான ஜெபத்தை ஏறெடுத்தார். பிசாசின் வல்லமையினால் அகப்பட்ட யாவரையும் இயேசு குணமாக்கினார். ஆகவே, இயேசுவே! என் சகோதரியையும் குணமாக்கும் என்று அவர் செய்த ஜெபம், வானத்திலிருந்து அற்புதத்தைக் கொண்டு வந்தது. இயேசுவின் நாமத்தினால் அந்த சகோதரி துள்ளிக்குதித்து எழுந்து உட்கார்ந்தார்கள். மரணம் அவர்களை விட்டு நீங்கினது. பின்னொரு நாளில் அதேபோல, மரணத் தருவாயில் படுத்தப்படுக்கையிலிருந்த ஜெனி என்கிற தன்னுடைய மனைவிக்காக அவர் ஊக்கமாய் ஜெபித்தார். சிறிது நேரத்தில் அவர்களும் துள்ளியெழுந்தார்கள். இப்படிப்பட்ட அற்புதங்கள் பிற்காலத்தில் அவரைப் வல்லமையான ஒரு ஊழியக்காரராக மாற்றிற்று.

## எதனால் அந்த சுகமளிக்கும் வல்லமை அவர்மூலம் கிரியை செய்ய ஆரம்பித்தது?

எனக்கு பிரியமானவர்களே, அவர் ஆப்பிரிக்க தேசத்தில், ஜொஹானஸ்பர்க் என்ற நகரில் தங்கியிருந்து, ஐந்து வருடங்களில் செய்த ஊழியத்தின் மூலம் சுமார் ஒரு லட்சம் பேர் சுகமானார்கள் என்று சரித்திரம் சொல்லுகிறது. தினந்தோறும் மக்களுக்கு சுகமளிக்கும் வல்லமையை தன்னுடைய வல்லமையுள்ள ஜெபத்தின் மூலமாக கொண்டு வந்தார். வேத வசனத்தை ஆதாரமாக கொண்டு, நோயை எதிர்த்து போராடினார். கர்த்தருடைய வல்லமை அவர் மூலமாக அநேகருக்கு வெளிப்பட்டது. சுமார் 1250 முழு நேர ஊழியர்களையும், போதகர்களையும் எழுப்பினார். 625 திருச்சபைகளை அவர் ஸ்தாபித்தார். கர்த்தருடைய வல்லமை அவர்மீது அளவில்லாமல் இறங்கினதினால், அநேக புறஜாதி மக்கள் கிறிஸ்துவின் பக்கமாக திரும்பியதோடு, அவரை

தங்கள் சொந்த இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டார்கள். ஒரு லட்சத் திற்கு மேலான ஆத்துமாக்களை அவர் ஆதாயப்படுத்தினார் என்று சரித்திரம் நமக்கு சான்று பகர்கின்றது.

எனக்குப் பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவானவர் இந்த உலகிற்கு வந்தது, இரட்சிப்பை தருவ தற்காகத்தான் மாத்திரமல்ல. அந்த இரட்சிப்போடு சுகமும் வழங்கும் படியாகத்தான். இயேசு கிறிஸ்துவின் மனதுருக்கத் தையும், தேவனுடைய சித்தத்தையும் நாம் வேதத்தில் காணலாம் (லூக்கா 13:16). கூனி யாயிருந்த ஒரு ஸ்திரீயை அவர் தேவாலயத்தில் கண்டபொழுது, அவர் போதகம் பண்ணிக் கொண் டிருந்த அந்த வேளையில், அவளைப் பார்த்து மனதுருகி, அவளை சுகப் படுத்தினார். அவள் சுகம்பெற்று, கூன் நிமிர்ந்த வுடன், ''ஓய்வு நாளில் இந்த அற்பு தத்தைச் செய்தீரே'' என்று ஆலய தலைவன் அவரை திட்டின பொழுது, 18 வருடமாய் பிசாசு கட்டி வைத்திருந்த ஆபிரகாமின் குமாரத்தி யாகிய இவளை நான் இன்று அவிழ்த்து விடுவது நியாயமல்லவா? என்று அவர் சொன்னார்.

எனக்குப் பிரியமானவர்களே, எவ்வளவு மனதுருக்கம். ஆபிரகாம் விசுவாசித்தான்; அதினிமித்தம் அவன் நீதிமானாய் மாறினான் என்று வேதம் கூறுகிறது. ஆபிரகாமின் வழியாக வந்த ஒவ்வொருவரும், ஆபிரகாமின் குமாரரும் குமாரத்தி யுமாயிருக்கிறார்கள். அந்த நாட்களில் பெண்களை ஒரு பொருட்டாக மதிக்காத சமுதாயத்தில், ஆபிரகாமின் குமாரத்தி என்று இயேசு அருள்மொழி பொழிந் தார். பெண்கள் மீது மனதுருக்கம் கொண்டவராய், அந்த ஸ்திரீ கேட்பதற்கு முன்பதாகவே, அவளைத் தொட்டு சுகப்படுத்தினார். அதற்குபின்பு, ''இவள் பிசாசினால் கட்டப்பட்டிருந்தாள்'' என்று ஆண்டவர் சொன்னார். நோய் ஒரு மனுஷனை, மனுஷியைக் கட்டி வைத் திருக்கிறது. அதைக் கட்டவிழ்க்கவே இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு இறங்கி வந்தார். அதே ஆண்டவர் உங் களையும் கட்டவிழ்க்க வருகிறார். உங்கள் நோயை சுகமாக்க விரும்பு கிறார். பிசாசு அனுப்புகிற நோயும், பெலவீனமும் நம்மை அடிமைப் படுத்தவே முடியாது. அது சிலவேளை களில் நம்மை பெலவீனப்படுத்துகிற ஆவியாகவேயிருக்கிறது. அது அவளை கட்டியிருந்தது என்று வேதம் சொல்லு கிறது (லூக்.13:11). ''இதோ நான் அநியாயமாய் நோயினால் அவதிப்படு கிறேன்; இந்த நோய் எனக்கு வர வேண்டிய அவசியமில்லை; நான் தேவனுக்கு பயந்து, அவருக்கு பிரிய மாய் வாழ்ந்து வருகிறேன்'' என்று சோதனையினால் வருகிற பாடுகள், துன்பங்களைக் கண்டு அங்கா லாய்த்துக் கொண்டிருக்கிற உங்களைப் பார்த்து, ''நீதியின் மேல் பசிதாக முள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர் கள் திருப்தியடைவார்கள்'' என்று இயேசு சொல்லுகிறார் (மத்.5:6). ஆம், நீங்கள் நீதியின் மேல் பசிதாகமாய்

இருக்கிறீர்களல்லவா? தேவன் உங்களைத் திருப்திப்படுத்த இயேசு கிறிஸ்துவை அனுப்பியிருக்கிறார். அவர் இன்றும் நம்மை சுற்றி உலாவிக் கொண்டிருக்கிறார். ஆகவேதான், அவரை "நீதியின் சூரியன்" என்று தீர்க்கதரிசி சொன்னார். அவர் தம்மை பிரதான சீஷர்களுக்கு மலையின்மேல் மறுரூபப்படுத்தி காண்பித்த பொழுது, அவருடைய முகம் சூரியனைப்போல பிரகாசித்தது என்று வேதம் சொல்லுகிறது (மத்.17:2). காரணம், தீர்க்கதரிசி சொன்ன அந்த நீதியின் சூரியன் "தாம்தான்" என்பதை நிரூபிக்கும் விதமாய் அப்படி சொன்னார். தீர்க்கதரிசி மல்கியா உவமையாக இயேசு கிறிஸ்துவையே "அவர் நீதியின் சூரியன்; அவர் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்" என்று சொல்லுகிறார். அதேபோல, "எருசலேமே, எருசலேமே,....கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று" என்று இயேசு சொல்லுகிறார் (லூக்.13:34). தன்னை ஒரு பறவைப் போலவும், தன் இறகுகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும் என்று உணர்த்தும்படியாகவும், "நான் உங்களை என்னுடைய இறகுகளின் கீழ் சேர்க்க வந்திருக்கிறேன்" என்று இயேசு சொன்னார். அதைத்தான், சங்கீதக்காரனாகிய தாவீது, "அவர் தமது சிறகுகளாலே நம்மை மூடுவார்" என்று (சங்.91:4)ல் கூறுகிறான். அவர் செட்டைகளின்கீழ் நாம் அடைக்கலம் புகும்பொழுது, நமக்கு ஆரோக்கியம் கிடைக்கிறது. இந்த செய்தியை வாசிக்கிற சகோதரனே, சகோதரியே, உங்கள் வாழ்க்கையில் நடக்கிற அநீதிகள், நீதியாய் மாறும். காரணம், உன்னுடைய நீதி வெளிச்சத்தைப் போல விளங்கும் என்று வேதம் சொல்லுகிறது (சங்.37:6).

எனக்கு பிரியமானவர்களே, உங்களுக்கு விரோதமாய் அநீதிகள் ஏற்பட்டிருக்கிறதா? வியாதி வந்திருக்கிறதா? உங்களைச் சுற்றிலும் நடக்கிற அநேக அநீதிகளினால் உங்களுக்கு வரவேண்டிய உயர்வு தடைப்பட்டிருக்கிறதா? நீங்கள் போகவேண்டிய இடத்திற்கு போக முடியாமல் பாதைகள் அடைப்பட்டிருக்கிறதா? உங்கள் வாழ்க்கையின் ஆசீர்வாதங்கள் தடைப்பட்டிருக்கிறதா? கவலைப்படாதிருங்கள். "நீதியின் சூரியன் உங்கள் மீது உதிப்பார்; உன் நீதி பட்டப்பகலின் வெளிச்சத்தைப்போல விளங்கும்" என்று இயேசு உங்களைப் பார்த்து சொல்லுகிறார். தேவனுடைய செட்டைகளின்கீழ் இருந்து உங்களுக்கு ஆரோக்கியம் பாய்ந்துகொண்டிருக்கிறது. அந்த ஆரோக்கியத்தையும், சுகத்தையும் நாம் அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்வோம். ●

- டாக்டர்.பால்.N,
Mo:9884739635
www.gloryofjesus.org, Chennai.

## இரஷ்ய எழுத்தாளர் டாஸ்டோவ்ஸ்கி

பழைய ஏற்பாட்டில் மீகா.7:15ல் சொல்லப்பட்டப்படி **"நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டநாளில் நடந்ததுபோலவே உன்னை அதிசயங்களைக் காணப் பண்ணுவேன்".**

உலகின் மிகச்சிறந்த இலக்கியங்கள், தேவனுடைய வார்த்தையினால் ஈர்க்கப்பட்டுள்ளன. 19ஆம் நூற்றாண்டின் இரஷ்ய இலக்கியங்கள் இதற்குச் சிறந்த சான்றாகும். புதிய ஏற்பாட்டில், இயேசு கற்பித்த அன்பு, மன்னிப்பு இவற்றின் சாராம்சம் இந்தக்கால இலக்கியங்களில் ஊறிக் கிடக்கின்றது. இன்றைக்கு நாம் 'பையோடர் டாஸ்டோவ்ஸ்கி' யைப் பற்றிப் பார்ப்போம். அவர் 1821ஆம் ஆண்டு மாஸ்கோவில் ஒரு பணக்காரக் குடும்பத்தில் பிறந்தார். பொறியாளர் பட்டம் பெற்றார். அவருடைய தகப்பனார், ஏழை மக்களுக்கு உதவி செய்யும் மருத்துவராக இருந்தார். டாஸ்டோவ்ஸ்கி வாலிபராக இருக்கும்போதே பெற்றோர் இறந்துவிட்டனர். நன்றாகப் பணம் சம்பாதித்த இவர் சூதாட்டத்தில் ஈடுபட்டார். 1840 ஆம் வருடத்தில் தன்னுடைய முதல் புத்தகமான "ஏழை மக்கள்" என்ற புத்தகத்தை எழுதினார். இது, மாஸ்கோவில் இலக்கிய வட்டத்தில் இவர் சேர உதவியது. இந்தக் இலக்கியக் குழு, இரஷ்ய அரசரைப் பற்றி மோசமாக விமர்சித்த புத்தகங்களைப் பற்றி விவாதித்தது. இக்குழுவின் அங்கமாக இருந்ததற்காக டாஸ்டோவ்ஸ்கி, 1849ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

இவரும் இவருடைய இலக்கியக் குழு நண்பர்களும் மரண தண்டனைக் குட்படுத்தப்படும்படியாக நகரில் இருந்த பொதுவான இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கண்கள் கட்டப்பட்ட நிலையில் படைவீரர்கள் அவர்களைச் சுடுவ தற்குத் தயாராக இருந்த நிலையில் குதிரையின்மேல், வெள்ளைக் கொடியுடன் வேகமாக வந்த மனிதன் அரசர் இவர்களை மன்னித்துவிட்டார் என்று அறிவித்ததால், நிறுத்தப்பட்டது. அரசர் மன்னித்து விட்ட செய்தியை ஒருநாள் முன்பாகவே அறிந்திருந்தாலும் சிறை அதிகாரிகள் மரண தண்டனையை நிறைவேற்றுவது வரை சென்றது மற்றவர்களுக்கு ஒரு பாடமாக அமையட்டும் என்பதற்காகவும், கைதிகள் மரண தண்டனையின் போது மனரீதியாக அனுபவிக்கும் வேதனையைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக இப்படிச் செய்தார்கள். இதன் விளைவாக டாஸ்டோவ்ஸ்கியின் நண்பர் ஒருவர் அப்போதே பைத்தியமாகி விட்டார் என்றும் டாஸ்டோவ்ஸ்கியின் தலைமுடி ஒரே இரவில் நரைத்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. அப்போது அவருக்கு 29 வயதுதான். மரண தண்டனைக்குப் பதிலாக சைபீரியாவில் நான்கு ஆண்டுகள் கடினமாக வேலை செய்ய வேண்டும் என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

சைபீரியாவுக்கு நடந்து செல்லும் வழியில், வயதான பெண் ஒருத்தி,

புதிதாக இரஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட புதிய ஏற்பாடு ஒன்றைக் கொடுத்தாள். டாஸ்டோ வ்ஸ்கி பாரம்பரிய கிறிஸ்தவ குடும் பத்தில் பிறந்திருந்தாலும், அவர் இயேசுவை சொந்த இரட்சகராக அறிந்திருக்கவில்லை. ஆனால் சிறையில் தேவனுடைய வார்த்தை அவரோடு பேசியது; மணிக்கணக் கில் வேதத்தை வாசித்து, தியானித் தார். கூட இருந்த கைதிகளுக்குப் வேதத்தை வாசித்துக் காட்டினார். அவர் சிறையிலிருந்து வெளிவந்த பிறகு எழுதிய எல்லா இலக்கி யங்களிலும், இயேசுவின் அன்பும் அவருடைய இரட்சிப்பின் கிரு பையும், மீட்பின் வல்லமையும் நிறைந்திருந்தன. அவருடைய எழுத் தை விட்டு இயேசுவின் அன்பின் உபதேசங்கள் பிரிக்க முடியாதன வாக இருந்தன.

'குற்றமும் தண்டனையும்' என்ற அவருடைய நாவலின் கதாநாயகன் ரஸ்கோல்நிகோவ் ஒரு ஏழை மாண வன். மாஸ்கோ அருகிலுள்ள ஒரு கிராமத்தில், தாயுடனும், சகோதரி யுடனும் வசித்து வந்தான். அவன் மிகவும் புத்திசாலியாக இருந்த போதும், அவனால் எவ்விதத்திலும் பணம் சம்பாதிக்க முடியவில்லை. பணக்காரர்கள் மேலும் மேலும் பணம் சம்பாதிப்பதையும், ஏழைகள் மிகவும் ஏழைகளாக மாறுவதையும் பார்த்து இந்த உலகத்தின் அநியாயங் களைக் குறித்து, அதிகக் கோபம் அடைந்தான். ரஸ்கோல்நிகோவ் தன் னுடைய கடிகாரத்தை அடகு வைத்து கிடைக்கும் கொஞ்ச பணத்தில் அன் றாட வாழ்க்கையை நடத்த வேண்டி யிருந்தது. அடகுக்கடை வைத்திருந்த மூதாட்டி. பணக்காரியாக இருந்தாள். மிகவும் வயதானவளாகவும் பலவீன மாகவும் இருந்தாள். அவன் தன் கடிகாரத்தை அடகு வைக்கச் சென்ற போது யாரும் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்த மூதாட்டியைக் கொன்று பணத்தை எடுத்துக் கொண் டான். அப்போது அங்கு வந்த மூதாட்டி யின் உறவுக்காரப் பெண்ணையும் கொன்று விட்டான்.

ரஸ்கோல்நிகோவ் கெட்டிக்கார னாகவும், சட்ட மாணவனாகவும் இருந் ததால், கொலை செய்ததற்கான தடயங் களை மிகத் தந்திரமாக மறைத்து விடுகிறான். காவலர்கள் தொடர்ந்து கொலைகாரனைத் தேடியும் கடைசி வரை அவனைக் கண்டுபிடிக்க முடிய வில்லை. ரஸ்கோல்நிகோவ், தான் ஒரு புத்திசாலியாகவும் பகுத்தறிவாள னாகவும் இருப்பதால் கொலை செய்ததற் காக வருத்தப்படப்போவதில்லை என்று நினைத்தான். ஆனால் கொலை செய்த பிறகு அவனுடைய இருதயமும் மன சாட்சியும் அவனை வாதித்ததினால் தன் செயலால் மிகவும் வேதனைப்பட்டான். ரஸ்கோல்நிகோவ் அநேகரைச் சந்தித் தாலும், அதில் சோனியா விசேஷித்த வள். அவள் மிகவும் ஏழை. எந்த அதிகாரமும் இல்லாதவள்; ஆனால் சுத்தமான அழகான மனதை உடைய வள். அவள் இயேசுவின் போதனை களை நேசித்து அவளுக்குக் கொடிய தீங்கு செய்தவர்களையும் மன்னித் தாள். அவள் மூலமாக ரஸ்கோல் நிகோவ் மனந்திரும்பி இளகிய மனம் உள்ளவனானான்.

- 22ம் பக்க பார்க்க..

# நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது சீஷர்களைப் பார்த்து 'நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்' என்று கேட்டார் (மத்.16:15).

இது கிறிஸ்தவ சுவிசேஷ ஊழியத்தில் தமது சீஷர்களை ஆயத்தம் செய்ய இயேசு அவர்களிடம் கேட்ட எளிமையான கேள்வி. ஆனால் மனுஷீக ஞானத் திற்கு எட்டாத கனமான கேள்வியாகும். முன்னதாக, தன்னிடம் வந்து சுகம் பெற்றுப் போன ஜனங்களை குறித்து இப்படிக் கேட்கிறார். 'என்னை ஜனங்கள் யாரென்று சொல்லுகிறார்கள்? பொதுவாக நம்மில் ஒருவர் அல்லது தலைவர் தம்மைச் சுற்றியுள்ள நண்பர்கள் வட்டத்தில் மக்கள் நம்மைப் பற்றி என்ன கூறு கிறார்கள் எனக் கேட்டால் அது ஒரு பெருமையின் அடையாளமாகவே இருக்கும். ஆனால் இங்கு இயேசு அப்படியல்ல. சர்வத்தையும் அறிந்திருக்கும் கர்த்தர், ஜனங்கள் தம்மை யாரென்று சொல்லுகிறார்கள் என்பதை அறியாமலா இருந் திருப்பார்? அவர் அனைத்தையும் அறிந்தவர். அவருக்கு மறைக்கப்பட்ட அந்தரங் கம் என்று ஏதுமில்லை. தம் கூடவே இருக்கும் தமது சீஷர்கள், இயேசு செய்து வரும் அற்புதங்களையும், அவர் கொடுத்துவரும் சுகங்களையும் பெற்றுவரும் ஜனங்கள் எவ்வாறு ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிக்கிறார்கள். எவ்வாறு கிறிஸ்துவைப் புரிந்துள்ளார்கள் என்பதை தம் சீஷர்கள் விளங்கிக் கொண்டுள் ளார்கள் என்பதை தம் சீஷர்களே தங்கள் நாவினால் அறிக்கை பண்ணவே இந்த அதிரடியான கேள்வியை கர்த்தர் கேட்டார்.

பிதாவாகிய தேவன் தம் ஒரே பேரான குமாரனாகிய இயேசுவை என்ன நோக்கத்திற்காக இவ்வுலகத்தில் அனுப்பினார் என்பதையும் தாம் வந்த நோக்கம் நிறைவேறிய பின் தமது சீஷர்கள் செய்ய வேண்டிய தமது ஊழியத் தைச் செய்ய தக்கபடி அவர்களை ஆயத்தம் செய்வதே இயேசுவின் திட்டம். எனவே, மீண்டும் சீஷர்களிடம் கேட்கிறார், 'நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்'. உடனே சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக 'நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து' என்றான். இயேசு அவனை நோக்கி, யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான். மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார் என்றார் (மத்.16:17) .

பேதுரு அறிக்கையிட்டதை உடனிருந்த மற்ற சீஷர்களும் கேட்டுக் கொண்டிருந்திருப்பார்கள். அவர்களுக்கும் அது சாட்சியாகும். அப்பொழுது, தாம் கிறிஸ்துவாகிய இயேசு, என்று ஒருவருக்கும் சொல்லாதிருக்கும்படிக்குத் தம் முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார் (மத்.16:20). அதுமுதல் இயேசு எருச லேமுக்குப் போய், மூப்பராலும், பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும் பல பாடுகள்பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என் பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார் (மத்.16:21). இந்த மேலான ரகசியத்தைத் தெரிவித்ததால் பலமுறை இந்த தேவ திட்டத்தைக் குறித்து அவர்களுக்கு நினைவூட்டியுமுள்ளார். ஆனால் சீஷர்கள் இயேசு

பலமுறை கூறிய இந்த மேலான திட்டம் என்ன என்பதைப் புரிந்து கொண்டார்களா? அவர் சித்தம் என்ன என்பதை விளங்கிக் கொண்டார்களா? அவர் சொல்லைக் கருத்தில் கொண்டார்களா? அவரை விசுவாசித்தார்களா? என்றால் அதுதான் இல்லை.

மற்றுமொரு முறையும் இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய் விட மனதாயிருக்கிறீர்களோ என்றார் (யோவா.6:67). இங்கேயும் பன்னிருவரில் பேதுருதான், ஆண்டவரே யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே (6:68) என்றான். நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான். ஆனாலும் அவர்கள் விசுவாசத்தில் விழுந்து விழுந்து போகிறதை அவர்களால் மேற்கொள்ள முடியவில்லை. மூன்றரை ஆண்டுகள் இயேசு கூடவே இருந்து கர்த்தர் செய்யும் அற்புதங்களைத் தங்கள் கண்களால் கண்டு கொண்டிருந்தார்கள். மலைப்பிரசங்கம் முதல் அவர்தம் எல்லாபிரசங்கங்களையும் தங்கள் காதுகளால் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் பற்பல சந்தர்ப்பங்களில் இயேசுவோடு இவர்கள் இல்லாதபோதெல்லாம் சீஷர்கள் இப்படித்தான் விழுந்து விழுந்து போனார்கள். அவரை அவர்கள் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள ஒரு தீர்க்கதரிசியாக மட்டுமே கருதினார்கள். அவர்களைப் பொறுத்தவரை அவர் ஒரு மாமனிதர், ஒரு ஞானி, ஒரு நல்லவர். அவ்வளவே. ஆனால் அவர் மூன்றாம் நாள் அதிகாலைவேளை தாம் முன்னுரைத்தபடியே உயிருடன் எழுந்த செய்தியை சகோதரிகள் மூலம் கேட்டறிந்த பிறகும், நம்பாமல் பேதுருவும் யோவானும் அவர்களுடைய வார்த்தைகள் இவர்களுக்கு வீண் பேச்சாகத் தோன்றினதால், பேதுரு விசுவாசிப்பதற்குப் பதிலாக ஆச்சரியப்பட்டான் (லூக்.24:12). அவர் தேவன். அவர் மனிதன். அவர் தேவமனிதன். அவரே மனித தேவன். அவரே மாம்சமான மனிதனைச் சிருஷ்த்தவர். மனித பலவீனங்களை அவர் அறிந்தவர். மனுஷனுடைய தேவை களையும் பலவீனங்களையும் கண்டு அவர் கடந்து போகிறவர் அல்ல. திரும்பவும் அவர்கள் மத்தியில் தோன்றினார். கிலெயோப்பாவும் மற்றொருவனும் எம்மாவு கிராமத்துக்குச் செல்லும் வழியில் இயேசு சொன்னபடியே உயிர்த்தெழுந்தார் என்பதை உணராதவர்களாக அவரைக் குறித்த வர்த்தமானங்களைப் பேசியபடியே நடந்துசெல்கையில் உயிர்த்தெழுந்த இயேசு தாமே அவர்களுடனே சேர்ந்து நடந்து போகிறதை அறியாது துக்கமுகத்துடனே நடந்து போனார்கள். அது மட்டுமல்ல, அவரே இஸ்ரவேலை மீட்டி இரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம் என்று அவர்களுடைய அவிசுவாசத்தையும் வெளிப்படுத்தினர் (லூக்.24:21). மீண்டும், மூன்றாவது தரிசனமாக, இயேசு திபேரியா கடற்கரையிலே தம்மை வெளிப்படுத்தி மீண்டும் மீன்பிடிக்கச் சென்ற அவர்களை நோக்கி 'பிள்ளைகளே! புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்று கேட்டு, அவர்கள் கரையேறி வந்தபின் அவர்களுக்கு அப்பத்தையும் மீனையும் கொடுத்து விசுவாசத்தில் பலப்படுத்தினார்.

- 31ம் பக்க பார்க்க..

# ஓர் சிறுபேட்டி



**நடுத்தரவயது சகோதரி**: ஐயா, அநேக நல்ல கிறிஸ்தவர்கள் கூட இந்த நாட்களில் ஆண்டவரை அறிந்திருந்தும் அவரை விட்டு தூரம் போய்க் கொண்டிருக்கிறார்களே! அவர்களை மீண்டும் முன்னிலைக்குக் கொண்டுவர அவர்களுக்கு என்ன ஆலோசனை கூறலாம்.

**முதியவர்:** தாவீது என்ற தேவ மனிதர், தனது வாழ்க்கையில் பல ஏற்றதாழ்வுகளை சந்தித்த மனிதன். ஆனாலும் அவரது அசையாத நம்பிக்கையைப் பாருங்கள். “கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை” (சங்.16:8). அப்படிப்பட்ட ஒரு தைரியமான விசுவாசம் (Courageous Faith) நமக்கு அவசியம். அதைத்தான் ஒவ்வொருவரும் கடவுளிடத்திலிருந்து கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். பெற்றுக்கொள்ள நாம் ஊக்குவிக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பின் நற்செய்தியை நமக்கு சுமந்து வந்த நமது முற்பிதாக்களை நாம் நினைவு கூற வேண்டும். கடல் கடந்து எத்தனையோ மைல்கள் கடந்து வந்து நாம் வாழ்ந்த சூழ்நிலைக்கு ஏற்ப தங்களைத் தாழ்த்தி, மிகப்பெரிய தியாகங்கள் (Sacrificial Life) செய்து நம்மை இரட்சிப்புக்கு வழிநடத்தினார்கள். இந்த தியாகத்திற்கு இணையான ஒரு தியாகம் இருக்கவே முடியாது. அவர்களின் தியாகங்களை இந்த சந்ததியினருக்கு நினைப்பூட்ட வேண்டியது மிக அவசியம்.

இன்று அதிகாலை நான் கண்ட கனவு (21.4.2021). மற்றவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கட்டுமே என்று கருதி இதை வடிவமைத்துத் தந்திருக்கிறேன்.

- தொகுப்பாசிரியர்



## கர்த்தர் பெரியவர்

**ஆண்டவர் சிருஷ்டிப்பில் வல்லவர் என்பது மாத்திரமல்ல அழகிய பறவைகளை, பூக்களைப் போல வடிவமைக்கிறார். மக்கள் கவனங்களைக் கவர்ந்திழுத்து, காணுகிற அவர்களை மகிழ்விக்கிறார். மக்களை கவர்ந்திழுப்பதில் அவர் எவ்வளவு கரிசனையுள்ளவராயிருக்கிறார்? அவர் எவ்வளவு பெரியவர்.** ●

**- 30ம் பக்கத் தொடர்ச்சி....**

இப்படியாக மாம்ச பலவீனர்களான தம் சீஷர்களையும் கர்த்தர் பலப்படுத்தி, அவர்களை நோக்கி: நீங்கள் உலகெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்றும் (மாற்.16:15), நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து (மத்.28:19)ன்படி... பலப்படுத்தப்பட்ட இந்த சீஷர்களுக்கு உலகளாவிய உக்கிராணத்துவத்தைக் கொடுத்தார். இன்றைக்கு உலகம் முழுவதும் பெற்று வரும் வெளிச்சமும், மனந்திரும்புதலும், இரட்சிப்பும் பெருகி வருவதற்கு பலவீனர்களாயிருந்த இந்த சீஷர்களைத்தானே இயேசு பயன்படுத்தினார். நாமும் பலவீனர்கள் தானே, பாவிகளாயிருக்கும் வரை, ஆனால், இப்பொழுது? சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, பலப்படுத்தப்பட்டுள்ள இரட்சிக்கப்பட்ட கர்த்தராகிய இயேசுவின் பிள்ளைகளன்றோ? ஆகவே, இயேசு கேட்ட கேள்விக்கு பேதுருவைப் போல நாமும் கூறுவோம். 'நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து' என்று.

**- சகோ.S. தங்கராஜ், சேலம். 9443699044** ●

RNI NO. TNTAM/2001/06473

# வேர்டு ஆஃப் கிரைஸ்ட்

## கிறிஸ்தவ இலக்கிய புத்தக சாலை

## கிளைகள்

**பெரியகுளம் :**
ஜே.டி.என். பில்டிங்ஸ், வைகை அணை ரோடு,
பெரியகுளம் – 625 601. போன் : 04546 232689

**மதுரை :**
ராஜம் பிளாசா, தல்லாகுளம்,
மதுரை – 625 002. போன்: 0452 2535373.

**திருச்சி :**
எண்.1F, ஒய்.எம்.சி.ஏ. வளாகம்,
ஈ.வே.ரா.ரோடு, புத்தூர், திருச்சி – 620 017.
போன் : 0431 2792266.

**கெல்லிஸ் :**
எண்.100/3, நிர்மலா அப்பார்ட்மெண்ட்,
மேடவாக்கம் டேங்க் ரோடு, கெல்லிஸ்,
சென்னை–10. போன் 044 26613242 / 42640111.

**அடையார் :**
ஹபீப் காம்ளக்ஸ், எண்.5 துர்க்காபாய் தேஸ்முக்
ரோடு, சத்தியா ஸ்டுடியோ அருகில்,
சென்னை–28. போன் 044 24616161.

**தாம்பரம் :**
பழைய எண்.57 புதிய எண்.12,
வெங்கடேசன் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–45. போன் 044 – 22260743.

**போரூர் :**
எண்.22/1–A, ஆற்காடு ரோடு,
BSNL டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் அருகில்,
போரூர், சென்னை–600 116. போன் : 044 – 24762520.

**புதுச்சேரி :**
எண்.66, செங்குந்தர் வீதி,
உருலான்பேட், நெல்லித்தோப்பு,
புதுச்சேரி – 605 005. போன் 0413 2204122.

**திமாப்பூர் :**
எண்.20, நியாமோ லோக்தா ரோடு,
திமாப்பூர் – 797 112. நாகலாந்து.
போன் : 03862 230207.

**இட்டா நகர் :**
ஆர்.கே. மிஷன் ரோடு, இட்டா நகர்,
அருணாச்சல் பிரதேஷ் – 791 113.
போன் : 0360 2217563.

**ஷில்லாங் :**
கேஜேபி அசெம்பிளி கான்பிரன்ஸ் சென்டர்
ஸ்டேட் சென்ட்ரல் நூல் நிலையம் எதிரில்,
ஷில்லாங். போன்: 0364–2500044 / 9445366066

**தூரா :**
ரிங்கேரி, மேற்கு காரோ ஹில்ஸ், தூரா,
மெகாலயா – 794 001.
மொபைல் : 03651 224729.

**போரிவலி (மே) :**
பில்பெரி, கடை எண்.1. ஐ.சி.காலனி,
கார்ப்பரேஷன் பேங்க் அருகில், போரிவலி மேற்கு,
மும்பை – 400103. போன் :022 28925763 / 09967645333

**ஹுப்ளி :**
எண்.L/1, சுவிதா அனெக்ஸ், கான்வென்ட் பள்ளி,
எதிரில், ஃபுட் பாஸ்கட் அருகில்,
கேஷ்வாஷபூர், ஹுப்ளி – 23,
போன் : 0836 6290555.

**கர்நாடகா:**
எண்.71, நேரு மெயின் ரோடு,
அரவிந் நகர்,
கமன ஹல்லி, (Below) முத்தூட் பைனான்ஸ்,
பெங்களூர் – 560 084. போன் : 06366826622

**நாகலாந்து :**
c.k.ஆர்காடு, தலைமை அஞ்சல் அலுவலகம்,
எதிரில், கொஹிமா – 797 001, நாகலாந்து.
போன் : 0370 2292222.

e-mail to : wocmdu@gmail.com

**Owned, Edited and Published by K. Selwyn Thangadurai,**
D.No.23B, "Thy Grace", Sebastian Church Road, New Ellis Nagar Extn., Madurai - 16.
Ph:0452:4345580. E-mail : wocmdu@gmail.com.
**website: www.wordofchrist.org**
Printed by Mr. Simon Peter at Vasanth Prints & Packs, No.45, Soorappa Mudali Street, Triplicane, Chennai - 600 005. Tamilnadu, India. Ph.044 28485805